
# தமிழரசு

16-7-1991 ரூ. 1







# முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு 'பாரத ரத்னா' விருது

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு புதுடெல்லி யிலுள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் 6.7.'91 அன்று நடந்த சிறப்பு நிகழ்ச்சியில் நாட்டின் மிக உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருதை மேதகு குடியரசுத் தலைவர் திரு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் வழங்கினார்.

ராஜீவ் காந்தியின் துணைவியார் திருமதி சோனியா காந்தி அவர்கள் விருதைப் பெற்றுக் கொண்டார். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் அரிய தொண்டினைப் பாராட்டி அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

'பாரத ரத்னா' விருது பெற்றவர்களில் மிகவும் இளையவர் ராஜீவ் காந்திதான். இந்த விருது 1954-ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. இதுவரை 24 தலைவர்களுக்கு இந்த விருது வழங்கப் பட்டிருக்கிறது.

## இந்த இதழில்...


எல்லாரும் எல்லாமும் பெற —மேதகு ஆளுநர் உரை ... 2

நல்ல திட்டங்களையும் சட்டங்களையும் நிறைவேற்றுவோம்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 12

பெருந்தலைவர் காமராசர் வாழ்க்கைக் குறிப்பு ... 14

படமும் செய்தியும் ... 16

தமிழ்நாட்டின் உயிர்நாடி காவிரி —மாண்புமிகு முதல்வர் உரை ... 18

மதுவை ஒழிப்போம்! ... 21

ஈடு இணையற்ற மக்கள் தலைவர் ராஜீவ்காந்தி —மாண்புமிகு முதல்வர் உரை ... 25

ஆடிப்பட்டம் (கவிதை) ... 29

கர்ம வீரர் காமராசர் ... 31




# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

ஆனித் திங்கள் - 32

மலர்: 22 இதழ்: 2

16-7-1991



- அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 1 கோடி.
- தொழில் முன்னேற்றத்திற்குப் புதிய வேகம்.
- அரசு அலுவலர் இறக்க நேரிட்டால் காப்புத்தொகை ரூ.60 ஆயிரம்.
- ஆலய மேம்பாட்டுக்கு 'ஆலய நிர்வாக வாரியம்'
- பாமர மக்களை மீட்க, தாய் மார்களின் தவிப்பைப் போக்க மலிவு விலை மது ஒழிப்பு
- நமது இலட்சியம் பூரண மது விலக்கு
- விரைவில் உள்ளாட்சித் தேர்தல்கள்
- அனைவர்க்கும் நோயற்ற வாழ்வு

# எல்லாரும் எல்லாமும் பெற...

## மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள்

### (தமிழ்நாடு சட்டப்பேரவையில் 4.7.1991 அன்று ஆற்றிய உரை)

**மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே,**

தமிழ்நாட்டில் புதிதாக அமைக்கப்பட்ட சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடரில் உரையாற்றுவதிலும் நடந்து முடிந்த சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கு வீற்றிருக்கக் கூடிய உங்கள் அனைவரையும் பாராட்டுவதிலும் வரவேற்பதிலும் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். நடந்து முடிந்த தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் அதிக அளவில் பங்கேற்று ஜனநாயகப்பண்பாட்டில் தமக்குள்ள நம்பிக்கையையும் பொறுப்புணர்ச்சியையும் வெளிக்காட்டியுள்ள பாங்கினைப் பாராட்டி, அவர்களுக்கு என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.


உங்களில் பலர் சட்டமன்றப் பேரவைக்குப் புதியவர்களாயினும் நீங்கள் ஜனநாயக ரீதியாக

உங்களுடைய கடமைகளை ஊக்கத்துடனும் கண்ணியத்துடனும் நிறைவேற்றும் தகுதி பெற்றவர்களாக இருப்பீர்கள் என்று நான் நன்கு அறிவேன். மேலும், மக்கள் இதுவரை கண்டிராத அதிக எண்ணிக்கையில் பெண் உறுப்பினர்களைச் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுத்திருப்பது நம்முடைய சமுதாயத்தின் முற்போக்கான எண்ணங்களைத் தெளிவாக்குகிறது என்பதை ஏற்றுக்கொள்வீர்கள்.

இந்தத் தேர்தலில் ஆளும் கட்சியாக அமைந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தோழமைக் கூட்டணியும் எட்டு இடங்களைத் தவிர அனைத்து இடங்களையும் கைப்பற்றி வெற்றி வாகை சூடியுள்ளது. இது இந்தியக் குடியாட்சி வரலாற்றில் இதுவரை காணப்படாத ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகும். இத்தேர்தல் தமிழ்நாட்டு மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும், அதனுடைய தலைவியான மாண்புமிகு முதலமைச்சர் மீதும் கொண்டுள்ள அழுத்தமான நம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றது. கடந்த காலத்தில் அவர்களுக்கு அரசியலில் இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி வழங்கும் வகையில் மக்களின் இந்த மகத்தான தீர்ப்பு அமைந்துள்ளது. தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் முதலமைச்சர் என்கிற சிறப்பினைப் பெற்ற மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே ' அமைதிப்பூங்கா ' எனச் சிறப்பாக மதிக்கப்பட்டு வந்துள்ள தமிழ் நாட்டில், கடந்த மே திங்கள் 21 ஆம் நாளன்று இரக்கமற்ற கொடியவர்களின் சதியால் இந்திய நாட்டின் முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியை மிகுந்த மன வேதனையுடன் குறிப்பிட விரும்புகிறேன். சில ஆண்டுகளாகவே தமிழகத்தில் வளர்த்து விடப்பட்ட வெடிகுண்டு கலாச்சாரத்தின் விளைவால்தான் உலகளாவிய சிறப்பு பெற்றிருந்த அம் மகத்தான மனிதரை இந்திய நாடு இழக்க நேரிட்டது. அவருடைய மறைவுக்கு இம் மன்றத்தின் மூலம் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் மறைந்த அதே இடத்தில், அரசின் சார்பில் உரிய முறையில் நினைவிடம் ஒன்று அமைக்கப்பட்டு, அவர் புகழ் நிலைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்டை நாட்டுப் போராளிகளும் தீவிரவாதிகளும் தமிழ்நாட்டை ஒரு தளமாகப் பயன்படுத்தி, அமைதியை விரும்பும் தமிழ்



மக்களின் வாழ்க்கையில் விரும்பத்தகாத சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளைப் புகுத்த முயன்று கொண்டிருக்கும் இந்த நேரத்தில், தமிழ்நாட்டு மக்களின் அமோகமான ஆதரவு பெற்று பொறுப் பேற்றிருக்கும் அரசு, மீண்டும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி அமைதி காத்து, மக்கள் எந்தவிதமான அச்சமும் இன்றி வாழ்க்கை நடத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து, தனது பொறுப்பினை உங்களுடைய ஒத்துழைப்புடனும் தமிழ்நாட்டு மக்களின் ஆதரவுடனும் சிறந்த முறையில் நிறைவேற்றும் என்கிற உறுதியினைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அதற்கேற்றவகையில் எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறுப்பேற்றுள்ள அரசின் தலையாய பணி, மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றி, லஞ்ச ஊழலற்ற, நேர்மையான, நியாயமான ஆட்சியை மேற்கொண்டு, இந்தியத் துணைக்கண்டத்தில் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக, தமிழகத்தில் ஒரு நிர்வாக அமைப்பை ஏற்படுத்துவதாகும்.

இந்திய நாடு ஒரு பழம்பெரும் நாடு. பண்பாட்டிலும் வரலாற்றிலும் மற்ற பல துறைகளிலும் இந்திய மக்களின் ஒருமைப்பாட்டு உணர்வு சிறந்து விளங்குவதை நாம் மறுக்க முடியாது என்ற உணர்வினை மதித்தும், பிரிவினைச் சக்திகளை எதிர்த்தும், நாட்டின் ஒருமைப்பாடு பலப்படுவதன் மூலமே நாடு வளரும், மக்களும் வளர்வர் என்கிற கொள்கையை நமது அரசு தலையாய கொள்கையாகக் கொண்டுள்ளது. பொருளாதார வலிமை, சமூக நீதி, அமைதியான சூழ்நிலை ஆகிய வற்றைக் கொள்கையாகக் கொண்டு திட்டங்களை நிறைவேற்ற உறுதிகொண்டு பணியாற்றும் மைய அரசுக்குத் தமிழ்நாடு அரசு முழு ஆதரவைத் தரும்; ஒத்துழைப்பையும் வழங்கும். அதே நேரத்தில், மாநிலங்கள் வளர்ச்சி அடைந்தால்தான் இந்திய நாடு முழுதும் வளர்ச்சி அடையும் என்கிற அடிப்படையில் நமது அரசு அமைந்துள்ளது. பேரறிஞர் அண்ணா வழியில், டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரன் எடுத்துரைத்துள்ள ''கட்டுண்டு வாழோம், பிரிவினை நாடோம், சமநிலையில் இணைவோம்'' என்பதே எங்களின் குறிக்கோளாக இருக்கும்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டுச் செயலாக்கப்பட்டு வந்த தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிக் கொள்கையையே நமது அரசு தொடர்ந்து செயல்படுத்தும். அரசு நிர்வாகத்தில் தமிழ்மொழியை அதிக அளவில் பயன்படுத்துவதை விரைவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தமிழ்மொழி வளர்ச்சிக்கான திட்டங்களை வகுப்பதுடன் செயல்படுத்துவதிலும் நமது அரசு தீவிரமாக ஈடுபடும்.

நமது அரசு பதவி ஏற்றவுடனேயே மக்களுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியை நிறை வேற்றும் வகையில் மலிவு விலை மதுக்கடை களை மூடிவிட ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் லட்சோபலட்சம் இல்லங்களில் ஒளி யேற்றி, தாய்மார்களின் துன்பங்களைத் துடைக்க

வகை செய்யப்பட்டுள்ளது. பூரண மதுவிலக்கே இந்த அரசின் கொள்கையாகும். மலிவு விலை மதுக்கடைகளை மூடுவதால் இவ்வரசுக்கு ஏற்படும் இழப்பு கணிசமாக இருந்தாலும், பாமர மக்களை அழிவுப் பாதையில் இருந்து மீட்பதற்காகவே இவ்வரசு இம்முடிவினைச் செய்துள்ளது. மலிவு விலை மதுக்கடைகளை மூடுவதுடன், தமிழ் நாட்டில் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் மீதும் விற்பவர்கள் மீதும் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும். மதுவிலக்கின் நன்மைகளை மக்களிடையே விளக்கி, மதுவிடமிருந்து மக்களை மீட்கும் வகையில் தகுந்த பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் கண்காணிப்பதற்கும் உயர்நிலைக் குழு உருவாக்கப்பட்டு, இந்தப் பணிகள் தீவிரப்படுத்தப்படும்.

விலைவாசி உயர்வின் பாதிப்பிலிருந்து ஏழை எளிய மக்களையும், நடுத்தர வகுப்பினரையும் பாதுகாப்பதற்கு மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இந்த அரசு முழு ஒத்துழைப்பு வழங்கும். மேலும், இதற்காகச் சிறந்த முறையில்




பொது விநியோக முறையைப் பயன்படுத்துவது பற்றியும் நமது அரசு தீவிர கவனம் செலுத்தும். நிர்ணயிக்கப்பட்ட அளவில் அத்தியாவசியப் பொருள்கள் மக்களைச் சென்றடையும் வகையில் பொது விநியோக முறை சீர்திருத்தி அமைக்கப் படும். தற்போது இந்த முறையில் காணப்படும் சீர்கேடுகளைக் களையவும் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

நமது மாநிலப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் வேளாண்மைத் துறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், அதன் வாயிலாக விவசாயிகளின் நலன்களை மேம்படுத்துவதற்கும் அரசு திட்டங்களைச் செயல்படுத்தும். நில மேற்பரப்பு நீர் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு விட்ட நிலையில், விவசாயத்திற்குச் சிக்கனமாக நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்தத் தக்க செயல் முறைகளை அரசு ஊக்குவிக்கும். இதற்கான நவீனப் பயிற்சி முறைகள் அளிக்கத் தேவையான நிதி உதவி அளிக்கப்படும். தரிசு நிலங்களையும், விவசாயத்திற்குப் பயன்படுத்தப் படாதிருக்கும் நிலங்களையும் வேளாண்மைக்குக் கொண்டுவரத் தகுந்த நிர்வாக அமைப்புக்கள் உருவாக்கப்படும். தமிழகம் முழுவதும் உள்ள ஏரிகள், குளங்கள் ஆகியவை தக்க பராமரிப்பின்றி முழுமையான பலன் அளிக்காத நிலையில் உள்ளன. இவற்றைச் சீரமைத்து நிலையான நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தித் தர அரசின் துறைகள் முடுக்கி விடப்படுகின்றன.

காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையைத் தீர்க்க அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் இடைக்

கால உத்தரவு பிறப்பித்து இருப்பதை மன்ற உறுப்பினர்கள் அறிவர். உறுதியான பாசன வசதியை அளிப்பதால் இந்தத் தீர்ப்பு ஓரளவு திருப்தியைக் கொடுத்த போதிலும், நமது தேவைக்கு ஒதுக்கப்பட்ட அளவு போதுமானதாக இருக்காது என்பதைக் கருதும்போது, இந்த இடைக்காலத் தீர்ப்பு முழுமையான மன நிறைவை அளிக்க இயலாது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். காவிரிப் பாசன பகுதிகளின் தேவைக்கு முழுமையான ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு நமது அரசு எல்லா நடவடிக்கைகளையும் நடுவர் மன்றத்தில் தொடர்ந்து மேற்கொள்ளும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

விவசாயிகளின் கடன்கள் ரத்து செய்யப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்துவருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நல்ல நேரத்தில் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் ஆட்சியில், பால் உற்பத்தியாளர்களுக்கு மற்றக் காலங்களைவிடக் கோடை காலத்தில் கொள்முதல் விலையுடன் கூடுதலாக ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தக் கொள்கை கைவிடப்பட்டு ஒரே விலை அளிக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டிலிருந்து ஏற்கனவே இருந்த முறையைப் பின்பற்றி, கோடை காலத்தில் ஊக்கத் தொகை வழங்கப்படும்.

உழுபவருக்கே நிலம் சொந்தம் என்பதே இவ்வரசின் நிலச்சீர்திருத்த கொள்கை என்கிற அடிப்படையில், அந்தக் கொள்கையைச் செயலாற்றுகின்ற வகையில் டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களின் ஆட்சியில் பினாமி நிலங்களை கையகப்படுத்தி, அந்த நிலங்களை நிலமற்றவர்களுக்குச் சொந்தமாக்க சட்ட வரைவு ஒன்று இந்தப் பேரவையில் நிறைவேற்றப்பட்டாலும், பல்வேறு காரணங்களால் அது நடைமுறையில் கொண்டுவரப்படவில்லை. மீண்டும் பினாமி நிலங்களைக் கையகப்படுத்தி நிலமற்றவர்களுக்கு அளிப்பதற்காக, சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள விரைவாக இவ்வரசு சட்டமன்றப் பேரவையில் புதியதொரு சட்ட வடிவைக் கொண்டு வரும்.

கிராமப்புற முன்னேற்றத்திற்கென கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டும் கூட, கிராமப்புறங்களில் அடிப்படை வசதிகளைப் பெறமுடியாத நிலை இருந்து வருகிறது. கிராமப்புறங்களில் இன்றியமையாத அடிப்படை வசதிகளான இணைப்புச் சாலை வசதிகள், குடிநீர், தெருவிளக்கு, சுகாதார வசதிகள் போன்றவை தேவையான அளவு உருவாக்கப்படாமலும் பராமரிக்கப்படாமலும் இருக்கின்றன. இவ்வகையான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு ''சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்'' ஒன்றினை அரசு உடனடியாக நிறைவேற்றத் தொடங்கும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ரூ. 1 கோடி என்ற அளவில் ரூ. 384 கோடி செலவில் இப்பணிகளை அரசு மேற்கொள்ளும்.

ஊராட்சி மன்றங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் அதிகாரங்களைப்

பெருக்க இந்த அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும். இந்த உள்ளாட்சி நிறுவனங்களின் பணிகளை மேற்கொள்ளுவதற்குத் தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்வதற்கும் வழிவகைகளை அரசு அமைத்துக் கொடுக்கும். மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய அனைத்து நிறுவனங்களுக்கும் விரைவில் தேர்தல்கள் நடத்தப்படும்.

தமிழ்நாட்டில் கணிசமான தொழில் வளர்ச்சிக்குத் தேவையான எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுத்துத் தொழில் துறையை ஊக்குவித்து, தொழில் நுட்பத் தேர்ச்சிபெற்ற லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகரித்து, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் குறைந்த கால அளவிற்குள் சிறந்த முன்னேற்றத்தைக் காண்பது நமது அரசின் தலையாய பணியாக அமையும். தொழில் தொடங்குமுனைவோருக்குத் தேவையான ஊக்கமளிக்கவும் அரசின் பல்வேறு விதிகளிலும் விதிமுறைகளிலும் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதிலும் அரசு கவனம் செலுத்தும். கூட்டுத்துறையில் நிறுவனங்கள் அமைக்கச் செயல்படும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், மற்றும் தொழில் தொடங்க வசதிகளையும் ஊக்க உதவிகளையும் அளித்து வரும் தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் செயல்பாட்டினைச் செம்மையடையச் செய்து, தொழில் முன்னேற்றத்திற்குப் புதிய வேகம் அளிக்கப்படும். தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிர் அளித்து, இந்தியாவிலேயே தொழில்துறையில் முன்னேற்றம் அடைந்த முதல் மாநிலமாக தமிழ்நாட்டை மாற்ற வேண்டும் என்பதே நமது அரசின் குறிக்கோளாகும்.




இயற்கை வளங்கள் அதிகம் பெற்றிராத தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசின் தொழில் முதலீடு மிக அவசியமாகும். நாட்டின் மொத்த முதலீட்டில், தமிழ்நாட்டில் 8 சதவீத அளவில் இருந்த மத்தியஅரசின் முதலீடு 5 சதவீதமாக தற்போது குறைந்துள்ளது. தொழில் வளர்ச்சிக்கு மிக உதவிகரமாக அமையக்கூடிய 'தேசிய அரோமேட்டிக்' திட்டம் (NAPCO) மற்றும் தமிழ்நாட்டிற்கு எரிவாயு கொண்டு வர தென் மாநிலங்களுக்கான எரிவாயுக் குழாய் அமைக்கும் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற, நமது அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

தொழில் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையாக அமையும் மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதில் நமது அரசு தீவிர கவனம் செலுத்தும். தமிழ்நாட்டில் தனியார் துறையில்

மின்நிலையங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கவும் ஒத்துழைப்பு அளிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்வாறு மின் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கும் அதே நேரத்தில், சூரிய வெப்பம், சூரிய ஒளி, கடல் அனல் மின்சக்தி, காற்றுச் சக்தி போன்றவற்றைப் பயன்படுத்தி மின் உற்பத்தி மேற்கொள்ளும் திட்டங்களையும் நிறைவேற்ற நமது அரசு நடவடிக்கைகள் எடுக்கும்.

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் பெரும் பகுதி அனல் மின் நிலையங்களில் இருந்து நமக்குக் கிடைக்கின்றது. இந்த அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரி இன்றியமையாதது. தமிழ்நாட்டில் நிலக்கரி கிடைக்காத காரணத்தால் வெளி மாநிலங்களிலிருந்து நிலக்கரியைக் கொண்டுவரவேண்டியுள்ளது. இதில் இருக்கக்கூடிய பல சிக்கல்களால் அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. அண்மையில் இதுபற்றித் தமிழ்நாடு முதலமைச்சர் ஆந்திர முதலமைச்சருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியதன் பயனாக, ஆந்திர முதலமைச்சர், உடனடியாக தமிழ்நாட்டு அனல் மின் நிலையங்களுக்கு ஒரு லட்சம் டன் நிலக்கரியை அனுப்புவதாக உறுதி அளித்துள்ளார். மேலும், 1991 செப்டம்பர் திங்களுக்குப் பிறகு தொடர்ந்து சிங்கரேணி சுரங்கத்திலிருந்து நிலக்கரி அனுப்புவதாகவும் கூறியுள்ளார். இதனைப் பேரவை உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன்.

அனைவருக்கும் நோயற்ற நல்வாழ்வு அளிப்பதே நமது அரசின் நோக்கமாக இருக்கும். இந்த இலக்கை அடைவதற்குத் தற்போது கிராமப்புறங்களில் இயங்கிவரும் மருத்துவமனை மற்றும் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அங்கு தேவையான மருந்துகள் இருப்பதற்கும், மருத்துவர்களின் பணியை மேம்படுத்தவும் தக்க நடைமுறைகள் வகுத்துச் செயல்படுத்தப்படும். கிராமப்புற மருத்துவ வசதிகளைப் பெருக்குவதுடன், மாவட்ட மருத்துவமனைகளிலும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் நவீன மருத்துவ வசதிகளை உருவாக்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மீது அரசு தனிக்கவனம் செலுத்தும். இதற்கான செயல்திட்டங்கள் தீட்டப்பட்டு விரைவில் நடைமுறைப்படுத்தப்படும். மேலும், கிராம மக்களுக்கு எல்லாவிதமான நல்வாழ்விற்கான மருத்துவத் தேவைகளைச் சீரிய முறையில் நிறைவேற்ற, இப்போதுள்ள அமைப்புகள் திருத்தியமைக்கப்பட்டு, ஒருங்கிணைந்த முறையில் செயல்பட வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

பிற்பட்டோர் நலனை ஒரு முக்கியமான குறிக்கோளாகக் கொண்டு, டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களின் அரசால் பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீடு ஐம்பதுசதவீதமாக உயர்த்தப்பட்டு, ‘இந்தியாவிலேயே அதிக இட ஒதுக்கீடு வழங்கும் மாநிலம் தமிழகமே’ என்னும் நிலை உருவாக்கப்பட்டது. மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஏற்றுச் செயல்படுத்தும் நேரத்தில்,. மத்திய அரசும் பிற்பட்டோருக்கு ஐம்பது சதவீத ஒதுக்கீட்டை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், அனைத்துத் துறைகளிலும் வேலை வாய்ப்பு அளிப்பதில் இட ஒதுக்கீடு பொருந்தியதாக வேண்டும் என்றும்,

கல்வி நிலைய அனுமதியிலும் மேற்படி அளவில் ஒதுக்கீடு உருவாக்கப்பட வேண்டும் என்றும் நமது அரசு வலியுறுத்தும்.

தாழ்த்தப்பட்டோர்களின் முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்கள் தீட்டப்பட்டும்கூட, அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான ஆக்க பூர்வமான நடைமுறைகள் செயல்படுத்தப் படாததால், இன்றைக்கும் பல்வேறு பகுதிகளில் அவர்கள் நலிந்த நிலையிலேயே வாழ்ந்து வருகின்றார்கள். வறுமையிலிருந்து அவர்களை உயர்த்தவும், சமுதாயத்தில் அவர்களுக்குச் சம நிலையை ஏற்படுத்தவும் உரிய முயற்சிகளை மேற்கொள்ள இந்த அரசு பாடுபடும். இதற்கான செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப் படும்.

சமுதாயத்தின் சரிபாதியினராக உள்ள பெண்கள் ஆண்களுக்கு நிகரான வாய்ப்புகளைப் பெற எல்லா முயற்சிகளையும் நமது அரசு மேற்கொள்ளும். பெண்கள் தங்களது சுய வருமானத்தில் வாழ்க்கை நடத்தும் வகையில், அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்ளத் தேவையான கல்வி வசதிகளும் வேலை வாய்ப்பு வசதிகளும் உருவாக்கப்படும். தொடக்கப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரையில் கல்வி கற்பிப்பதற்குப் பெண்களை மட்டுமே ஆசிரியர்களாக இனி அரசு நியமிக்கும். நடுநிலைப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் கூடுதலான ஆசிரியைகள் பணிபுரிய வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.


ஒரு வேளைக்குக் கூட உணவின்றித் தவிக்கும் ஏழை எளிய மக்களின் குழந்தைகளின் நலன் கருதி, நோயற்ற வலிவுள்ள ஒரு புதிய தலைமுறையை உருவாக்க, டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களால் செயல்படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டம், அன்னாரது மறைவுக்குப் பின் நிகழ்ந்த மாற்றங்களினால் அடிப்படை நோக்கங்களை எய்த முடியாத நிலை உருவாகியுள்ளது. அடிப்படை நோக்கங்கள் முழுதும் நிறைவேறும் வகையில், இத்திட்டத்தின்



அமைப்பு சீரமைக்கப்படும்; குறைகள் களையப்படும். இத்திட்டச் செயல்பாட்டினை சீரமைத்து மேற்பார்வையிட்டுவர உயர்நிலைக்குழு ஒன்று அமைக்கப்படும். குழந்தைகளின் தேவைகளுக்கு ஏற்ப, எண்ணெய், பருப்பு ஆகியவற்றின் அளவு உயர்த்தப்படும்.

அரசு அலுவலர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின்கீழ், பணியில் இருக்கும் ஒரு அலுவலர் இறக்க நேரிட்டால் ரூ. 40,000 காப்புத்தொகையாக வழங்கப்படுகிறது. இந்தக் காப்புத் தொகையை ரூ. 60,000ஆக உயர்த்த அரசு முடிவெடுத்துள்ளது.

தமிழகத்தில் சிறப்புக்குரிய கோயில்களின் பராமரிப்புப் பணிகளையும் ஆலய நிர்வாகத்தையும் கவனிக்கத் தனியாக ஒரு ‘ஆலய நிர்வாக வாரியம்’ அமைக்கப்படும். இந்த நிறுவனத்தின் மூலம் தமிழகத்தின் புகழ்மிக்க பெரிய கோயில்களின் பராமரிப்பும் வழிபாடுகளும் முறையாக நடைபெறத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.




கடந்த ஆண்டு கூட்டுறவுத் தேர்தல்களில் நடைபெற்ற முறைகேடுகளாலும் உறுப்பினர்கள் நியமனத்தில் நிகழ்ந்த தவறுகளாலும் கூட்டுறவு இயக்கமே சீரழிக்கப்பட்டுள்ளது என்று புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. இவைகளைக் களைவதற்காகத் தகுந்த சட்டத் திருத்தங்கள் கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாநிலம் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள சோதனையான தருணத்தில் இவ்வரசு பதவியேற்றுள்ளது. மலிவு விலை மதுக்கடைகளை மூடுவதென அரசு முடிவு எடுத்ததை அடுத்து, மேலும் சுமார் ரூ. 322 கோடி அளவிற்குக் கூடுதல் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிற்கும் ரூபாய் ஒரு கோடி ஒதுக்குவது போன்ற தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட பல முற்போக்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்குக் கூடுதல் நிதி தேவைப்படுகின்றது. இவைகளையெல்லாம் சுட்டிக்காட்டி, மாறுபட்ட சூழ்நிலையில் மைய அரசில் பொறுப்பேற்றுள்ள புதிய அமைச்சரவையை அணுகி, நம் மாநிலத்தின் இடர்ப்பாடான நிதி நிலையை எடுத்துக் கூறி, நமக்குக் கூடுதல் நிதியுதவி கிடைக்கும் வகையில் முனைப்பான முயற்சிகள் எடுக்கப்படும். மத்திய அரசு நம் மாநிலத்திற்கு முழு ஒத்துழைப்பு அளித்து, கூடுதல் நிதி ஒதுக்கீடுகளை வழங்கும் என நம்புகிறேன்.

சட்டமன்றத்தின் இக்கூட்டத்தொடர் மிகக் குறுகிய கால அளவிற்கே நடைபெற வுள்ளது. இக் குறுகிய காலக் கூட்டத்திற்குப் பின், விரைவில் அரசின் நிதிநிலை அறிக்கைக்கான கூட்டத்தொடர் கூடவிருக்கின்றது. மக்கள் உங்கள்மீது அபரிமிதமான நம்பிக்கையோடு உங்களைத் தேர்ந்தெடுத்து இந்த அவைக்கு அனுப்பியுள்ளார்கள்.

புதிதாகப் பதவி ஏற்றிருக்கும் அரசு வகுத் திருக்கும் வளர்ச்சிப் பாதையைக் கோடிட்டுக் காட்டக் கூடிய சில கோட்பாடுகளை மதிப்புமிக்க இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்துள் ளேன். இக்கொள்கைகளைத் தீவிரமாகவும் திறம் படவும் செயல்படுத்துவதன் மூலம், சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரும் பயனடையும் வகையில், மாநிலத்தில் ஒட்டுமொத்த சமூக – பொருளாதார வளர்ச்சியை உருவாக்க முடியும் என நம்புகிறோம். இந்த அவையின் நடவடிக்கைகள், அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சியை விரைவுபடுத்த உரியவாறு திட்டமிட்டுத் திறம்பட நடவடிக்கை எடுப்பதற்கு உதவும்.

நீங்கள் மேற்கொள்ளவிருக்கும் பணிகளில் உங்களுக்கு வெற்றி கிட்ட என் இனிய வாழ்த்துக் களைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

---

# பெருந்தலைவர் நினைவு போற்ற...



★ கிண்டி பட்டேல் சாலை யில் காந்தி மண்டபத்தை அடுத்துள்ள வளாகத்தில் காமராசர் உடல் எரி யூட்டப்பட்ட இடத்தில் தமிழக அரசு காமராசர் நினைவகத்தை உருவாக் கியது.

★ விருதுநகரில் காமராசர் வாழ்ந்த இல்லத்தைத் தமிழ்நாடு அரசு அரசு உடைமையாக்கி நினைவு இல்லமாக்கியுள்ளது.

★ சென்னைக் கடற்கரைச் சாலைக்குக் ‘காமராசர் சாலை’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

★ சென்னை தியாகராய நகர் திருமலைச் சாலை யில், பெருந்தலைவர் காமராசர் வாழ்ந்து வந்த வீட்டை அரசுடைமை ஆக்கி, நினைவு இல்லமாக மாற்றியுள்ளது தமிழக அரசு. அவர் பயன்படுத் திய பொருட்கள், முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறும் புகைப் படங்கள், படித்த நூல்கள், ஆகியவை இந்த நினைவு இல்லத்தில் நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ளன.

★ மதுரைப் பல்கலைக்கழகத் திற்கு ‘மதுரை-காமராசர் பல்கலைக் கழகம்’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

★ விருது நகரைத் தலைமை இடமாகக் கொண்டு காம ராசர் மாவட்டம் என்ற பெயரில் புதிய மாவட்டம் 1984-ஆம் ஆண்டு தமிழக அரசால் உருவாக்கப் பட்டது.

# நல்ல திட்டங்களையும் சட்டங்களையும் நிறைவேற்றுவோம்!

## மாண்புமிகு முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

சிறந்த பண்புகளையும் - சீரிய குணநலன்களையும் - நல்ல செயல் திறனையும் கொண்டுள்ள உங்களை இப்பேரவையின் மாண்புமிகு தலைவராகவும்,

பேராசிரியர் பொன்னுசாமி அவர்களைப் பேரவையின் துணைத் தலைவராகவும் இப் பேரவை ஒருமுகமாகத் தேர்ந்தெடுத்துள்ளது.

சுமுகமான முறையில் மாண்புமிகு தலைவர் - துணைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்பட உதவிய பேரவை உறுப்பினர்கள் அனைவர்க்கும், என் மனமார்ந்த நன்றியை ஆட்சிக் கட்சியின் சார்பிலும், அரசின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களையும், துணைத் தலைவரையும் பாராட்டி, அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் பேசியுள்ளனர். இந்த அவையின் உயர்வினையும் - அவைத் தலைவர்களாகத் திகழ்ந்த பெருமக்களின் சிறப்புக்களையும் பலபட எடுத்துக் கூறினார்கள்.

**அவையின் பெருமையைக் காத்திட...**

கண்ணியம் மிக்க இந்த அவை இந்தியத் திருநாட்டுக்கே எடுத்துக்காட்டான அவையாகத் திகழ்ந்துள்ளது என்பதை நாம் அறிவோம்.

அப்பேர்ப்பட்ட சிறப்புக்குரிய இந்த அவையின் வரலாற்றில், சில கால கட்டங்களில் ''கரும் புள்ளிகள்'' விழுந்த நிகழ்ச்சிகள் நடந்து விட்டதையும் எவரும் மறந்திருக்க மாட்டார்கள் என்றே கருதுகிறேன்.

தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் ''வடுக்களாக''க் காட்சி தரும் அந்நிகழ்ச்சிகள் இனி என்றைக்கும் நிகழா வண்ணம், இந்த அவையின் பெருமையை அவைத் தலைவரும் - துணைத் தலைவரும் பேணிக் காத்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்வேன்.

சீர்மிக்க இந்த அவையின் ''இழந்த பழம்புகழ் மீள வேண்டும்'' என்பதுதான், இந்த அவையில் எனது முதலாவது வேண்டுகோள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கான பக்குவமும், பயிற்சியும் மாண்புமிகு பேரவைத் தலைவர் பெற்றிருக்கிறீர்கள். இதே அவையின் சட்டமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றி இருக்கிறீர்கள். அதுமட்டுமல்லாது நாடாளுமன்றத்தில் உறுப்பினராகவும் பணியாற்றி இருக்கிறீர்கள். நாடாளுமன்ற மக்களவை வரலாற்றில் ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள்.

அக்காலக் கட்டங்களில் எல்லாம் நீங்கள் பெற்றிருக்கும் அனுபவம் இப்பேரவையை நல்ல முறையில் நடத்தி செல்ல உறுதுணையாக இருக்கும் என நம்புகிறேன்.

**நடுநிலையோடு பணியாற்றிட...**

மாணவப் பருவத்தில் இருந்தே திராவிட இயக்கத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொண்டு - பொதுத் தொண்டாற்றி வந்துள்ளீர்கள். கல்லூரி நாட்களில் 1965-இல் இந்தி எதிர்ப்புப் போரிலும் - அதன் பின்னர் 1972-இல் புரட்சித் தலைவர் தலைமையில் நடந்த புனிதப் போரிலும் ஈடுபாடு கொண்டு, இயக்கப் பணி ஆற்றி வந்துள்ள உங்களை இன்றுவரை என்ன பணி கொடுக்கப் பட்டாலும் முகம் சுளிக்காது செய்து முடிப்பவராகவும், எந்த இன்னல் வந்தாலும் கொண்ட இலட்சியம் மீது பற்று துளியும் குறையாது தொண்டாற்றி வருபவரும் ஆகவே கண்டு வந்துள்ளேன்.

இத்தகைய சிறப்புக்குரிய ஓர் கட்சித் தொண்டராய்ப் பணியாற்றி வந்துள்ள உங்களை, கட்சி சார்புகளுக்கு அப்பாற்பட்டு நடுநிலையோடு பணியாற்ற வேண்டிய பொறுப்பில் அமர்த்தி உள்ளோம்.

இயற்கையாக உங்களிடம் அமைந்துள்ள பொறுமையும், பெருந்தன்மையும் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பினைச் சிறப்புறச் செய்து முடிக்க உதவும் எனக் கருதுகிறேன்.

அதன் மூலம் இந்த அவையின் மதிப்பையும், கௌரவத்தையும் நாங்கள் எல்லாம் பெருமைப் படும் அளவுக்கு உயர்த்துவீர்கள் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு.

**சம உரிமையும் சம அதிகாரமும்**

இந்தச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சமவாய்ப்புப் பெறுவார்கள் எனக் கருதுகிறேன்; ஜனநாயக அமைப்பில் அவ்வாறு பெற வேண்டும் என்பதுதான் வரவேற்கத்தக்க

நெறிமுறை ஆகும். அதற்காக எங்களது பரிபூரண ஒத்துழைப்பு அவைத் தலைவருக்குக் கிடைக்கும் என்ற உறுதியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

''அவைத் தலைவரின் அதிகாரம் வானளாவியது; அதுவும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அதிகாரம் வானளாவியதற்கும் அப்பாற்பட்ட ஒன்று''; என்ற ஒரு தவறான கருத்து இந்த மன்றத்தில் ஆதிக்கம் செலுத்தி இருந்ததை அனைவரும் அறிவோம்.

ஜனநாயக இந்தியாவில் நமது அரசியல் சட்டத்தில் எவருக்கும் கட்டுப்பாடற்ற வானளாவிய அதிகாரம் வழங்கப்படவில்லை. ஜனநாயகம் என்பதே தனி நபர் சர்வாதிகாரத்திற்கு எதிரானது என்பதை உணர்ந்தாவது அத்தகைய தவறான கருத்துக்களைத் தவிர்த்திருக்க வேண்டும்.

பாராளுமன்ற நெறிமுறைகள் படியும், இந்த அவையின் விதிமுறைகளுக்கு உட்பட்டும் தான் அனைவரது அதிகாரமும், அனைவரது உரிமையும் உள்ளது. எனவே சம உரிமையும், சம அதிகாரமும் பெற்றுள்ள இந்த அவையின் அனைத்து உறுப்பினர்களும், ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்னும் பாகுபாடின்றிப் பணியாற்றி, இந்த அவையின் பெருமையைக் காப்பதோடு நிறைந்த எதிர்பார்ப்புகளோடு நம்மை இந்த மன்றத்திற்கு அனுப்பியுள்ள நாட்டு மக்களுக்காகப் பணியாற்றுவோம்.

**நல்ல திட்டங்களும், சட்டங்களும்**

நல்ல திட்டங்களையும் - சட்டங்களையும் இந்த அவையின் மூலம் நிறைவேற்றுவோம்.

சமுதாயத்தில் பின்தங்கிய - தாழ்த்தப்பட்ட - நலிவுற்ற மக்களின் நன்மைக்காக இளமைக் காலம் முதற்கொண்டு பொறுப்போடு பணியாற்றி வந்துள்ள தாங்கள், இப்பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள இத்தருணத்தில், சமுதாயத்தின் அடித்தட்டு மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களும், தமிழகத்தைத் தலை நிமிரச் செய்திடும் தொழில் வளர்ச்சிப் பணிகளும் இம்மன்றத்தின் மூலம் தங்குதடையின்றி நடைபெற, எல்லா வகையிலும் இம்மன்றத்தின் ஒப்புதலைப் பெற்றுத் தருவீர்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, அவ்வகையில் அயராது பணியாற்றிக் காத்துக் கொண்டுள்ள தங்களைப் பெரிதும் பாராட்டி, என் இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே!

தங்களுக்குத் துணையாகப் பணியாற்றிட மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேராசிரியர் திரு பொன்னுசாமி அவர்கள் சிறந்த பொதுநலத் தொண்டர் ஆவார். இச்சட்டமன்றத்தில் சென்ற முறை முழுவதும் பல்வேறு சங்கடங்களுக்கு இடையிலும் சிறப்புறப் பணிபுரிந்தவர் ஆவார். இங்கு பலரும் பாராட்டியதற்கு ஏற்ப அவரும் தனது பணிகளைச் செம்மையாகச் செய்வார் என்ற நம்பிக்கையோடு, அவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் முன்னேற்றம்...

தமிழ்நாட்டின் வளர்ச்சி...

தமிழ்நாட்டின் தலைநிமிர்ந்த தன்மை-

இந்த இலக்கு நோக்கி இந்த அவை பீடு நடை பயின்றிட-

மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும் - துணைத் தலைவருக்கும் என் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் மீண்டும் மீண்டும் தெரிவித்து அமருகிறேன்.

நன்றி! வணக்கம்.

**—மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோரைப் பாராட்டி ஆற்றிய உரையிலிருந்து (3.7.1991).**

## சுற்றுப்புறச்சூழல்—சட்டங்கள்

***நீர் மாசுபடுவதைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் 1974-ஆம் ஆண்டில் முதலாவது சட்டத்தை இந்தியா இயற்றியது. இதைத் தொடர்ந்து 1981-ஆம் ஆண்டில் காற்று மாசுபடுவதைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் இதே போன்றதொரு சட்டம் இயற்றப்பட்டது. இவை தவிர, 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் ஏராளமான சட்ட விதிகள் நடைமுறையில் உள்ளன.***

***1974 மற்றும் 1981 ஆகிய ஆண்டுகளில் இயற்றப்பட்ட நீர் மாசுக்கட்டுப்பாட்டுச் சட்டம், காற்று மாசுக் கட்டுப்பாட்டுச் சட்டங்களின் கீழ் மத்தியிலும், மாநில அளவிலும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்கள் அமைக்கப்பட்டன. அவற்றுக்குத் தேவையான அதிகாரங்களும் வழங்கப்பட்டன. 1972 ஜூன் மாதத்தில் ஸ்வீடன் நாட்டின் ஸ்டாக்ஹோம் நகரில் மனித சுற்றுப்புறச்சூழல் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடு நடைபெற்றது. அப்போது சில வழிகாட்டி நெறிமுறைகளும் வழங்கப்பட்டன. இந்த மாநாட்டில் இந்தியாவும் கலந்து கொண்டது. இதன் பிறகு 1986-ல் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்புச் சட்டம் ஒன்றையும் இயற்றியது. ஆபத்தான பொருள்களைக் கையாளும் பல்வேறு நிறுவனங்களில் செயல்பாட்டில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும், சுற்றுப்புறச்சூழலுக்கு ஆபத்து நேரும் போது அவற்றைப் போக்கவும் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. சுற்றுப்புறச்சூழலுக்குக் கேடு விளைவிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் இந்தச் சட்டம் வழி வகை செய்கிறது.***

***1974, 1981-ஆம் ஆண்டு சட்டங்கள் 1987-ல் திருத்தம் செய்யப்பட்டன. சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்புக்கு தொழிற்சாலைகளின் உரிமையாளர்களே பொறுப்பேற்க வேண்டுமென்று இந்தச் சட்டங்கள் சுட்டிக் காட்டுகின்றன. தொழிலாளர்களின் சுகாதாரத்தைப் பாதுகாக்கவும், சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாக்கவும் தொழிற்சாலைகள் சட்டம் 1987-ல் திருத்தப்பட்டது. இந்தத் திருத்தத்தின்படி, ஏதேனும் தொழிற்சாலை துவக்க வேண்டுமென்றால், மாநில அரசு அமைத்து இருக்கும் இடமதிப்பீட்டுக் குழுவிடம் தடையில்லாச் சான்றிதழ் பெற வேண்டும்.***

# பெருந்தலைவர் காமராசர்
## வாழ்க்கைக் குறிப்பு



**1903-** விருதுபட்டி என்னும் விருது நகரில் குமாரசாமி நாடார் சிவகாமி அம்மாள் தம்பதிக்கு 1903 ஜூலை 15 அன்று மகனாகப் பிறந்தார். 1907-இல் தங்கை நாகம்மாள் பிறப்பு.

**1908-** திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப் பெற்றார். ஏனாதி நாயனார் வித்யாசாலா விலும், சத்திரிய வித்தியாசாலாவிலும் சேர்ந்து படித்தார்.

**1909-** தந்தை மறைவு.

**1914-** ஆறாவது வகுப்பு வரையில் படித்தார்.

**1919-** ஏப்ரல்-ரவுலட் சட்டத்தை எதிர்த்துக் காந்தியடிகள் விடுத்த அழைப்பை ஏற்று, காங்கிரசின் முழு நேர ஊழியரானார்.

**1920-** ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார்.

**1921-** தமிழ்நாடு காங்கிரஸ் செயலராக இருந்த பெரியாரை முதன்முதலாக விருதுநகரில் சந்தித்து, அவரது உறுதி மிக்க பேச்சுத் திறனைப் போற்றினார்.

**1923-** நாகபுரி கொடிப் போராட்டத்தில் பங்கு கொண்டார். மதுரையில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்.

**1925-** கடலூரிலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

**1926-** சத்தியமூர்த்தி - சீனிவாச அய்யங்கார் ஆகியோருடன் தேர்தல் பணி புரிந்தார்.

**1927-** சென்னையில் கர்னல் நீல் சிலையை அகற்றும் போராட்டத்தை நடத்த அண்ணல் காந்தியிடம் அனுமதி பெற்றார். போராட்டம் நடைபெறுவதற்குள் அரசாங்கமே நீல் சிலையை அகற்றிவிட்டது.

மதுரைக்கு வருகைபுரிந்த சைமன் குழுவை எதிர்த்தார்.

**1930-** வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டதால், இரண்டாண்டு அலிபூர் சிறையில் அடைக் கப்பட்டார்.

**1931-** காந்தி - இர்வின் ஒப்பந்தம் காரணமாக விடுதலை செய்யப்பட்டார். இராமநாத புரத்திலிருந்து சென்னை மாகாணக் காங்கிரஸ் செயற்குழுவிற்குத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

**1933-** சதி வழக்கில் சிறைக்கனுப்பப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்படாததால் விடுதலை செய்யப்பட்டார்.

**1934-** அவர் உழைப்பால் பொதுத் தேர்தலில், பெருவாரியான வாக்குகள் பெற்று காங்கிரஸ் வென்றது.

**1936-** காரைக்குடியில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டித் தேர்தலில் சத்தியமூர்த்தி தலை வராகவும், காமராஜ் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**1940-** தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் வென்றார்.

**1941-** யுத்தநிதிக்கு எதிர்ப்புப் பிரச்சாரம் செய்ததால், கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் இருக்கும்போதே 1941-மே 31 விருதுநகர் நகராட்சித் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

**1942-** மார்ச்-சிறையிலிருந்து விடுதலையானதும், ஒருநாள் மட்டும் நகராட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு, தீவிர கட்சிப் பணிக்காக நகராட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.

**1942-** ஆகஸ்டு போராட்டத்தில் கைது செய்யப் பட்டு, அமராவதி சிறைச்சாலையில் இரண்டு ஆண்டுகள் கழித்த பிறகு, வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். 1945-இல் விடுதலை ஆனார்.

**1946-** மே 16- தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றார். அதே ஆண்டு சென்னை சட்டமன்றத் திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## நினைவில் காமராசர்

1976 ஜூலை 15-ஆம் நாள் காமராசர் நினைவு 25 காசு அஞ்சல் தலையை மத்திய அரசு சென்னை கலைவாணர் அரங்கத்தில் வெளியிட்டது. 1976-இல் 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டது. 1977 ஆகஸ்டு 18 தமிழ்நாடு சட்டப் பேரவையில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டியால் காமராசர் திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது.

1947- ஆகஸ்டு 15- இந்தியா விடுதலை பெற்றது. பண்டித நேருவின் தலைமையில் இடைக் கால அரசு உருவானது. அண்ணல் காந்தியடிகளைப் போற்றி அறிக்கை வெளியிட்டார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ஆனார்.

1948- மூன்றாவது முறையாகத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஆனார்.

1949- இலங்கையில் சுற்றுப்பயணம்.

1950- நான்காவது முறையாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஆனார்.

1952- நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார்.

1953- இலங்கையில் சுற்றுப் பயணம் செய்தார்.

1954- ஏப்ரல் 13- சென்னை மாநிலத்தின் முதலமைச்சர் ஆனார். குடியாத்தம் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டு வென்றார்.

1955- ஆவடி காங்கிரஸ் மாநாடு வெற்றிகரமாக நடைபெற அரும்பணி ஆற்றினார்.

1956- மொழிவழி மாநிலம் என்ற திட்டத்தின் படி புதிய தமிழகம் உருவாவதற்கு ஆதரவு தெரிவித்தார். பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை அமல்படுத்தினார்.

1957- பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, வென்று, இரண்டாவது முறையாக முதலமைச்சர் ஆனார்.

1960- ஏழைப் பிள்ளைகள் அனைவருக்கும் 11-ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி அளித்தார்.

1961- அக்டோபர் 9- சென்னை மாநகராட்சி உருவாக்கிய காமராசர் திருவுருவச் சிலையைப் பிரதமர் நேரு திறந்து வைத்தார்.

1962- பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக முதலமைச்சர் ஆனார்.

1963- எல்லாருக்கும் இலவசக் கல்வித் திட்டத்தை அமல்படுத்தினார். அக்டோபர் 2- காமராசர் திட்டத்தின்படி முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

1964- அனைத்திந்தியக் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மே 27-இல் நேரு அவர்கள் மறைந்த பிறகு, லால் பகதூர் சாஸ்திரி பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட ஆவன செய்தார்.

1965- இந்தியா-பாகிஸ்தான் போர் ஏற்பட்ட போது பஞ்சாப் போர்முனைப் பகுதிகளுக்குச் சென்று வீரர்களை உற்சாகப் படுத்தினார்.

1966- லால்பகதூர் மறைவுக்குப் பின்னர் இந்திராகாந்தி பிரதமராவதற்குக் காமராசர் ஆவன செய்தார். சோவியத் நாட்டிற்கும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று வந்தார்.

1967- பொதுத் தேர்தலில் தோல்வி.

1969- நாகர்கோயில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு.

காமராசர் அவர்களின் தாயார் மறைவு.

1971- நாடாளுமன்ற உறுப்பினராகக் காமராசர் தேர்வு.

1972- தாமிரபத்திர விருது பெற்றார்.


1975- எளிய குடும்பத்தில் பிறந்து, விடுதலைப் போராட்டத் தொண்டனாக வாழ்வைத் தொடங்கித் தன்னலமற்ற உழைப்பால், தியாகத்தால், மக்கள் தலைவராக உயர்ந்து, கோடிக்கணக்கான இதயங்களில் குடி கொண்டிருக்கும் பெருந்தலைவர் காமராசர் 1975 அக்டோபர் 2 அன்று அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாளில் நம்மை விட்டு உடலால் பிரிந்தார். நம் நெஞ்சில் நிறைந்தார்.




### அறிவுடைமை

எண்ணமெனும் கழனியில் எத்தனையோ விளைகின்றன. அவற்றின் பயன் யாவும் கண்டறிந்து எடுத்துச் சுவை பெறல் அறிவுடைமை!

# படமும் செய்தியும்



மாண்புமிகு முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களை, தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு மத்திய வர்த்தகத்துறை இணையமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் சந்தித்தார். *(8.7.1991)*



மாண்புமிகு மத்திய தொழிலாளர் நல இணையமைச்சர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள், மாண்புமிகு முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார் *(1.7.1991)*.



மாண்புமிகு மத்திய சட்ட இணையமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள், தமிழ்நாடு சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தார் (5.7.1991).



மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு க.இராசாராம் அவர்களும், மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு டி.எம்.செல்வகணபதி அவர்களும் சென்னை கோயம்பேடு மொத்த காய்கறி விற்பனை அங்காடி வளாகக் கட்டடக் கட்டுமானப்பணிகளைப் பார்வையிட்டார்கள் (7.7.'91).

மாண்புமிகு பால்வளம் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு டி.ஜெயக்குமார் அவர்கள், தென்சென்னையிலுள்ள ஆவின் தானியங்கி பால் வழங்கும் நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள பொது மக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார் (3.7.'91).



# தமிழ்நாட்டின் உயிர்நாடி காவிரி

## மாண்புமிகு முதல்வர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் உயிர்நாடி காவிரியில் இருக்கிறது. தமிழ்நாட்டில் கால்வாய்ப் பாசனத்தைச் சார்ந்துள்ள நிலங்களில் 85 விழுக்காடு நிலங்கள் காவிரி நீரை நம்பியுள்ளன. காவிரி நீரை உபயோகிப்பதில் தமிழ்நாட்டுக்கு உள்ள உரிமை மிகவும் பழமை வாய்ந்தது. அவ்வுரிமை தமிழ்நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் இடையே ஏற்பட்ட 1892-ஆம் ஆண்டு மற்றும் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆயினும் கர்நாடகம் தன்னிச்சையாக இவ்வுடன்படிக்கை விதிகளை மீறித் தனது எல்லைக்குள் 1958-ஆம் ஆண்டிலிருந்து நீர்த் தேக்கங்களைக் கட்ட ஆரம்பித்தது. அவ்வாறு அணைகள் கட்டுவதற்குத் தமிழ்நாடு அப்போதிலிருந்தே தனது எதிர்ப்புகளைத் தெரிவித்து வந்து உள்ளது.

1974-ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு உரிய தண்ணீரை முறையற்ற வகையில் கர்நாடகம் தனது நீர்த்தேக்கங்களில் தேக்கிப் பாசனத்திற்கும் பயன்படுத்தி வருகிறது. அத்தோடு ஆண்டுதோறும் தனது எல்லைக்குள் காவிரி நீரின் பாசனப் பரப்பை அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு வரவேண்டிய நீர் ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டே வருகிறது. இதன் காரணமாகத் தமிழ்நாட்டில் காவிரிப் படுகையில் பல இலட்சம் ஏக்கர் நிலங்களில் சாகுபடி பாதிக்கப் படுகிறது. குறுவைச் சாகுபடி அறவே



பாதிக்கப்படுகிறது. அத்தோடு ஒரு போகச் சம்பாச் சாகுபடியும் வானம் பார்த்துக் காத்துக் கிடக்க வேண்டி உள்ளது.

இந்தப் பிரச்சினையைப் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள ஏறத்தாழ 20 ஆண்டுகளாகப் பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப் பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்றன.

குறிப்பாக 16.6.1986 அன்று பெங்களூரில் மத்திய நீர்வள அமைச்சரின் தலைமையில் நடந்த படுகை மாநில முதல்வர்களின் கூட்டத்தில் அன்றைய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், பேச்சு வார்த்தைகள் முறிவடைந்ததாக அறிவித்து காவிரி நீர்ப்பிரச்சினையை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கேற்ப 6.7.1986 அன்று மைய அரசுக்கு 1956-ஆம் ஆண்டு பன்மாநில நதிநீர்த் தாவா சட்டப்படி நடுவர் மன்றம் அமைக்குமாறு விண்ணப்பம் அனுப்பப்பட்டது.

தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளைபொருள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கம் 1983-இல் கொடுத்திருந்த ரிட் மனுவின்பேரில் உச்சநீதி மன்றம் பிறப்பித்த ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டின் விண்ணப்பத்தை ஏற்று 2.6.1990-இல் மைய அரசு காவிரி நீர்ப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைத்து அறிக்கையை வெளியிட்டது.

28.7.1990 அன்று கூடிய நடுவர் மன்றத்தின் முதல் கூட்டத்திலேயே தமிழ்நாடு அரசு இடைக்கால நிவாரண ஆணை கோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. இதன் மீது படுகை மாநிலங்களின்(Basin States) கருத்துக்களையும் வாதங்களையும் கேட்டறிந்த பின், மைய அரசு தனக்கு அனுப்பிய ஆவணங்களில் இடைக்கால நிவாரணம் அளிப்பது பற்றி ஏதும் குறிப்பிட்டுச் சொல்லாததால், தமிழ்நாட்டின் மனுவின் மீது ஆணை பிறப்பிப்பதற்கில்லை என்று நடுவர் மன்றம் 5.1.1991 அன்று தீர்ப்பு வழங்கியது.

அதையடுத்து தமிழ்நாடு 10.1.1991 அன்று உச்சநீதி மன்றத்தில் சிறப்பு அனுமதி ஒன்றைத் தாக்கல் செய்தது. இதன்மீது உச்சநீதி மன்றம் தனது 26.4.1991-ஆம் நாளைய தீர்ப்பில், ஏற்கெனவே மைய அரசு காவிரி நீர்த்தாவா நடுவர் மன்றத்திற்கு அனுப்பியுள்ள ஆவணங்களிலேயே இடைக்கால நிவாரணக்

கோரிக்கையும் அடங்கும் என்று கூறி, இடைக்கால நிவாரண மனுக்களின் மீது விசாரணை மேற்கொண்டு, தகுதியின் அடிப்படையில் நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று ஆணையிட்டது.

அதன்பேரில் காவிரி நீர்த் தாவா நடுவர் மன்றம் இடைக்கால நிவாரணத்திற்கான குறிப்புகளையும், புள்ளி விவரங்களையும் கேட்டுப்பெற்று, படுகை மாநில வழக்கறிஞர்களின் வாதங்களையும் கேட்டு, தன் இடைக் காலத் தீர்ப்பை 25.6.1991 அன்று வழங்கியது. இந்தத் தீர்ப்பில்:


அ) இடைக்கால நிவாரண மனுக்களை விசாரித்து ஆணை வழங்கலாம் என்ற உச்சநீதி மன்றத்தின் ஆணை நடுவர் மன்றத்தையும், படுகை மாநில அரசுகளையும் கட்டுப்படுத்தும் ஆதலால், அம் மனுக்களை நடுவர் மன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்ற கேள்விக்கு இடமில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆ) கர்நாடகம் ஆண்டொன்றுக்கு மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு 205 டிஎம்சி நீர் கிடைக்கும் வகையில் தனது நீர்த் தேக்கங்களிலிருந்து நீர்விட வேண்டுமென்றும், அதில் மாதவாரியாக எந்தெந்த அளவு விடவேண்டுமென்றும், அந்த அளவுகள் நான்கு வாரங்களில் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

இ) அத்தோடு கர்நாடக மாநில அரசு தந்த கணக்குகளையே அடிப்படையாகக் கொண்டு, கர்நாடகம் தனது மாநில எல்லைக்குள் காவிரிப் படுகையில் தற்போது பாசனம் செய்துவரும் 11.20 இலட்சம் ஏக்கருக்கு மேல் பாசன விரிவாக்கம் செய்யக்கூடாதென்றும் ஆணையிடப் பட்டுள்ளது.

ஈ) இந்த இடைக்கால உத்தரவு, காவிரி நீர்த் தாவா நடுவர் மன்றம் இப்பிரச்சினையில் இறுதித் தீர்ப்பு அளிக்கும் வரைதான் அமலிலிருக்கும் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் காவிரிப் பாசனத்திற்கு நடுவர் மன்றத் தீர்ப்பில் கொடுக்கப்பட்டுள்ள 205 டி.எம்.சி நீர் போதுமானது அல்ல. 1974-ஆம் ஆண்டிற்கு முந்தைய 10 ஆண்டு



சுதந்திரம் என்றால் பயமில்லாது வாழ்வதுதான். பயமில்லாது வாழ நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்.

நாடு முன்னேற வறுமையும் அறியாமையும் போக வேண்டும். இவை இரண்டும் போனாலன்றி நாடு முன்னேறியதாகச் சொல்ல முடியாது.

களில், ஜூன் முதல் ஜனவரி வரை வந்த நீர் வரத்து சராசரி 302 டிஎம்சி என்ற புள்ளி விவரங்களைக் காட்டி, அதன் அடிப்படையில் தமிழ்நாட்டின் பழைய பாசனத்தைப் பாதுகாக்கப் போதுமான நீர் அளிக்க வேண்டுமென நடுவர் மன்றத்தின் முன் வாதாடினோம். இருப்பினும் நடுவர் மன்றம் தமிழ்நாட்டிற்கு இடைக்கால நிவாரணமாக மேட்டூர் அணையில் 205 டிஎம்சி மட்டுமே கிடைக்குமாறு தீர்ப்பளித்துள்ளது. ஆயினும், நடுவர் மன்றம் அனைத்துப் புள்ளி விவரங்களையும் பெற்று, பல தரப்பு விவரங்களையும் கேட்டு அறிந்தபின், தனது இறுதித் தீர்ப்பில் தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக நீர் வழங்கும் என்ற நம்பிக்கையோடும், பிரச்சினையை மேலும் வளரவிடாது மாநிலங்களிடையே நல்லுறவு நிலவ வேண்டுமென்ற எண்ணத்தோடும், காவிரிப் படுகை உழவர் பெரு மக்களின் உடனடி நலன் கருதியும், தமிழ்நாடு நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆனால், கர்நாடக மாநில அரசோ, இவ்விடைக்காலத் தீர்ப்பு தனக்குச் சாதகமாக இல்லை என்று கூறி ஏற்க மறுப்பதாகத் தெரிகிறது. நடுவர் மன்றம் அளித்த இடைக்கால உத்தரவு தம் அரசைக் கட்டுப் படுத்தாது என்றும், அவ்வுத்தரவின் படி தாம் தமிழ்நாட்டிற்கு நீர் விடப் போவதில்லை என்றும் கர்நாடக முதல்வர் கூறிவருகிறார். 6.7.1991 அன்று கூடிய கர்நாடக மேலவை யும், பேரவையும், இவ்விடைக்கால உத்தரவின்படி நடக்கவேண்டா மென்று அரசுக்குப் பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றி இருப்பதாகவும் செய்தி வந்துள்ளது.

நடுவர் மன்றத்தின் உத்தரவு இந்த ஆண்டு ஜூலை முதல் தேதியில் இருந்து அமுலுக்கு வரும் என்று தீர்ப்பிலேயே குறிப்பிடப்பட்டிருக் கிறது. மன்றத்தின் உத்தரவின்படி நீரை விடுமாறு தமிழகப் பொதுப் பணித்துறைச் செயலர், கர்நாடக நீர்ப் பாசனச் செயலருக்கு டெலக்ஸ் மூலம் இம்மாத முதல் தேதியே செய்தி அனுப்பினார். இம்மாதம் 3-ஆம் தேதியன்று நானும் கர்நாடக முதல்வர் திரு. பங்காரப்பாவிற்கு ஒரு அவசரச் செய்தி அனுப்பி உள்ளேன். அதில் மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு நீர் திறந்துவிட முடியவில்லை என்றும், காவிரி டெல்டா பகுதியில் சாகுபடி ஆரம்பிப்பதில் அதிகத் தாமதம் ஏற்பட்டிருக்கிறதென்றும், நடுவர் மன்றத்தின் தீர்ப்பின்படி உடனே கர்நாடக அணைகளிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறேன். பின் 5-ஆம் தேதி பாரதப் பிரதமருக்கும் கர்நாடகத்தின் செயலால் ஏற்படவிருக்கும் சிக்கலை எடுத்துரைத்து, நடுவர் மன்றத் தீர்ப்பை கர்நாடகம் ஏற்று அமல்படுத்த அறிவுரைகளை அளிக்க வேண்டுமென்று அவசரச் செய்தியும் அனுப்பியுள்ளேன்.

இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளக் கடந்த

இருபது ஆண்டுகட்கும் மேலாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்ற பின், சட்டப்பூர்வமாக இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மைய அரசால் நியமிக்கப்பட்ட உயர் நீதிபதிகளைக் கொண்ட நடுவர் மன்றம் அளித்துள்ள இடைக்காலத் தீர்ப்பை மதிக்கமாட்டோம் என்றும், அது தங்களைக் கட்டுப்படுத்தாது என்றும் கர்நாடக அரசு கூறுவது நியாய மற்றதும், மிகவும் வருந்தத்தக்கதும் ஆகும்.

தமிழகத்தின் தலையாய இப் பிரச்சினையில் இப்பேரவை ஒரு மித்த கருத்துக் கொண்டுள்ளது என்ற அடிப்படையில் கீழ்க்கண்ட தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றித் தரும்படி பேரவைத் தலைவர் அவர்களே - உங்கள் மூலமாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்க்கண்ட தீர்மானங்களை முன்மொழிகிறேன்:

**தீர்மானம்**

''ஆண்டொன்றுக்கு மேட்டூர் அணையில் 205 டி.எம்.சி. நீர் கிடைக்கும் வகையில் கர்நாடக நீர்த் தேக்கங்களிலிருந்து வாராந்திர அடிப் படையில் நீர்விடப்பட வேண்டும் என்பதுடன், மேலும் சில உத்தரவுகளையும் பிறப்பித்துள்ள காவிரி நதி நீர் தாவா நடுவர் மன்றத்தின் 25.6.1991-ஆம் நாளிட்ட இடைக் கால ஆணையை நிராகரிக்கும்படி, கர்நாடக அரசை வற்புறுத்திக் கர்நாடக மாநிலத்தின் இரு சட்டமன்றங்களும் தீர்மானம் நிறைவேற்றியதாகப் பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகள் இப்பேரவைக்கு ஆழ்ந்த கவலை தருவதாக உள்ளன.

வழக்கமாக ஜூன் 12-ஆம் தேதி பாசனத்திற்குத் திறக்கப்பட வேண்டிய மேட்டூர் நீர்த்தேக்கம், நீர் இருப்புக் குறைவாக இருப்பதாலும், நடுவர் மன்றத்தின் ஆணைக்கு இணங்க நீர் திறந்து விடுவது பற்றி கர்நாடக அரசிடமிருந்து உறுதியான அறிகுறிகள் இல்லாத நிலையிலும், இன்னும் திறக்கப்படாமல் இருப்பது கவலையளிப்பதாக உள்ளது.

நடுவர் மன்றம் அளித்துள்ள இடைக்கால நிவாரண ஆணை இம்மாநிலத்தின் தேவையையும் மற்றும் மாநில அரசினால் கோரப்பட்ட நீர் அளவையும் விடமிகக் குறைவாக இருப்பினும், ஒவ்வொரு மாநிலமும் இவ்வாணையின் மீது மாறுபட்ட கருத்துகள் கொண்டிருப் பினும், 1956-ஆம் ஆண்டைய நதி நீர்த் தகராறு சட்டத்தின்படி, சட்ட ரீதியாக அமைக்கப்பட்ட உயர் அதிகாரம் வாய்ந்த நடுவர் மன்றத்தின் ஆணை முற்றிலும் மதிக்கப்பட வேண்டும் என்பது இப்பேரவையின் உறுதியான கருத்தாகும்.

இம்மாநிலத்திற்கு உரிய தண்ணீரை 1974-ஆம் ஆண்டிலிருந்து கர்நாடகம் நியாயமற்ற முறையில் தனது நீர்த் தேக்கங்களில் தேக்கி, பயன் படுத்தி வந்துள்ளதன் காரணமாக, இம்மாநிலத்திற்கு ஏற்பட்டு வரும் இன்னல்கள் இனியும் தொடரவிடக் கூடாது எனப் பேரவை கருதுகிறது.

எனவே, நடுவர் மன்றத்தின் ஆணையை உடனடியாக அமலாக்க வேண்டுமென கர்நாடக அரசை இப்பேரவை கேட்டுக்கொள்கிறது.

தேவையெனில், நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பினை மைய அரசு உடனடியாக அரசிதழில் பிரசுரிக்குமாறு இப்பேரவை கேட்டுக் கொள்கிறது. மேலும், நடுவர் மன்றத்தின் ஆணையைச் செயல் படுத்தும்படி கர்நாடக அரசை வலியுறுத்துமாறு மைய அரசையும் இப்பேரவை கேட்டுக்கொள்கிறது.''

**—காவிரிப் பிரச்சினை பற்றிய தீர்மானங்களை நிறைவேற்றக் கோரி 8.7.1991 அன்று பேரவையில் ஆற்றிய உரை**

---

## பார்த்தோம் படித்தோம்

'மாட்டு வண்டிப் போட்டி' - டாக்டர் வெ.கிருட்டிணசாமி அவர்களின் கட்டுரையைப் படித்தேன் (16.6.91). வீரத்தின் விளைநிலமான தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுடன் தொடர்புடைய மாட்டுவண்டிப் போட்டியும் நடத்தப்படுகின்றது என்பதனை அறிந்து பெருமிதம் அடைந்தேன். மாட்டு வண்டிப் போட்டியின் ரொக்கம், போட்டியின் நடைமுறைகள், பரிசுகள், விதிகள் எனப் பல்வேறு விவரங்களை அறிந்துகொள்ள முடிந்தது. நாட்டுப் புற மக்களின் சிறந்த பொழுது போக்குக் கூறாகவும், வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் விளையாட்டாகவும் உள்ள இப்போட்டி வளர்க்கப் பட வேண்டியதொன்றாகும்.

—ந.சுந்தரபுத்தன்
கண்கொடுத்தவனிதம்

''சமையல் எரிபொருள் சிக்கனம்'' மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இதனை அனைத்துக் குடும்பமும் பின்பற்றினால் எரிபொருள் மிச்சமாவது உறுதி!.

—பூ. சுமதி
செல்லங்குப்பம்

'டீசல் சேமிப்பு' கட்டுரை அருமை! இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றினால் டீசலைச் சேமிப்பதோடு நாட்டுப் பொருளாதார மேம்பாட்டுக்கும் வழிவகுக்கலாம்.

—சி.அப்பர் சுந்தரன்
உ. அம்மாபட்டி

'முனையிலே முகத்து நில்' கட்டுரையின் எல்லாக் கருத்தையும் நேசித்து வாசித்தேன். நினைவிலே பாவேந்தரும் அகத்திலே கருத்தும் நின்றது. பாராட்டுக்கள்.

—தமிழ்க்கனல்தாசன்,
வேலூர்.

''சோவியத் யூனியனில் 'தமிழ் ஆய்வு' என்ற கட்டுரை மூலம், 'தமிழ் மட்டுமே தெரிந்த ஒருவர் சோவியத் யூனினுக்குச் சென்றால் எந்தச் சங்கடமும் இல்லாமல் உலவிவர முடியும்' என்ற செய்தியை நா.முகம்மது செரீபு அவர்கள் சுவைப்படக் கூறியிருந் தார்கள்.

—அரிமா.
பூபாலம் ப.முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

'தமிழரசு' பத்திரிகை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. அரசின் நலத்திட்டங்களை அழகாகக் கூறும் தமிழரசின் பணி தொடரட்டும்.

—கே.ருக்மாங்கதன்,
ஊமங்கலம்.

பல்வேறு செய்திகளைப் பாங்காய் வழங்கி ஒரு தரமான பத்திரிகையாக விளங்கி வருகிறது தமிழரசு.

—சி.சண்முகசுந்தரம்
பிரம்மதேசம்.



# மதுவை ஒழிப்போம்!



- பிரேமா நந்தகுமார்

‘மது அருந்துதல் தவறு என்று சொல்லலாமா? என்று கேள்வி. இன்றைய அரசியல் சாசனங்கள் விடுதலைக்கே முக்கியத்துவம் தருகின்றன. ‘எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு’ என்னும்போது, எனக்கு இஷ்டமானதை நான் சாப்பிட, நான் விரும்பியதை அருந்த எனக்குச் சுதந்திரம் இல்லையோ? ஒரு மனிதன் மது அருந்துவதை வேறொரு மனிதனோ, அம்மனிதன் வாழும் நாட்டின் அரசாங்கமோ தடுப்பது எந்த விதத்தில் நியாயம்?

பலமான கேள்விகள்தாம். ஆனால் விந்தையான மானுட ஜன்மத்திற்குத் தாய்மை உணர்வு ஒன்று இருக்கிறது. இந்த உணர்வு, குழந்தைக்கு அபாயம் என்றவுடன் ஓடிச் சென்று தடுக்கும் உணர்வு. தான் வருந்த நேரிடினும் தன் குழந்தை பிழைத்ததே என்னும் உணர்வு ‘‘நல்ல வேளை, தேள் என்னைத் தானே கொட்டிற்று. படுக்கையில் கிடந்த குழந்தையைக் கொட்டாமல் விட்டதே’’ என்று, தேள் கடித்துத் துயருறும்போதும் நிம்மதிப் பெருமூச்சு விடும் உணர்வு.

**மது நஞ்சாகும்**

இந்தத் தாய்மை உணர்வு செயல்படும்போது, மதுவைப் பருகும் மனிதனின் கையைப் பிடித்து நிறுத்த முயல்கிறது. அது தனிப்பட்ட ஓர் ஆண் அல்லது பெண்ணின் கரமல்ல. அது சமுதாயத்தின் தாய்மை உணர்வின் கரம். ஏன் என்றால், சமுதாய உண்மை கூவுகிறது: ‘‘என் மானிடக் குழந்தைக்கு இம்மது நஞ்சாகும். என் குழந்தை அநியாயமாகக் குடல் வெந்து சாகாமல் தடுப்பேன்.’’

மது நஞ்சாகும் என்பதும் ஒரு சமுதாய உண்மையே. இதை மனித சமுதாயம் பல கோடி விதங்களில் எடுத்துக் கூறிவந்திருக்கிறது. டாக்டர் லிஸ்ஸி ஜார்ஜ், தொகுத்துள்ள ஒரு சில ‘மது’ மொழிகளை ஏர் உழவனில் *(18-5-1991)* காணலாம்.

இங்கிலாந்து நாட்டை ஆண்ட விக்டோரியா மகாராணி, ‘‘மது ஒரு சாபக்கேடு’’ என்றார்.


‘‘உழைக்கும் தொழிலாளர்களுக்கு அது ஒரு கண்ணிவலை!’’ என்றார் எர்ல் கெயின்ஸ்.

மது, ‘‘கரைசலில் இருக்கும் பிசாசு!’’ என்கிறார் வில்பர்ட் லாசன்.

‘‘கடலைவிட ஒயினே அதிகமான மனிதர்களைத் தன்னுள்ளே அமிழ்த்தி விட்டது’’ எனக் கூறுகிறார் பிளெபியஸ் சைரப்.

‘‘மதுபானம் ஒரு மனிதனின் வாழ்வில் விரிந்து கிடக்கும் பிசாசின் பாதை மட்டுமல்ல; அவனைப் பிசாசிடம் கொண்டு சேர்க்கும் வழித்துணையும் அதுவே!’’ என்று மதுவின் கொடிய தன்மையை வர்ணிக்கிறார் ஆதம் கிளார்க்.

‘‘சாராயம் உடல்நலத்தைக் கொடுப்பதும் இல்லை; உடலுறு



பெண்கள் விழிப்பு அடைந்தால், குடும்பம் முன்னேறும்; கிராமங்கள் முன்னேறும்; தேசமே முன்னேறும்.

தியை அளிப்பதுமில்லை; அது வாழ்க்கையை வளப்படுத்துவதும் இல்லை; மகிழ்ச்சியைத் தருவதும் இல்லை. அது கெடுதலைத் தவிர வேறு எதையும் உண்டாக்குவதும் இல்லை!'' என்கிறார் ரஷிய அறிஞர் டால்ஸ்டாய்.

**அறமறவாளர்கள்**

மது குடிப்பதால் நமது ஆரோக்கியத்திற்கு நன்மை ஏதுமில்லை. தீமை பலப்பல உண்டு என்பது கிடக்கட்டும். மது வேண்டாம் என்பவர்கள், ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்பதன் மூல காரணங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும். மது குடிப்பதனால் அடுத்து உள்ளவர்க்குக் கேடு எதுவுமில்லாவிட்டால், நமக்கு எவரையும் 'குடிக்காதே' என்று சொல்ல அதிகாரம் இல்லை. சுதந்திரமாக, ஆனந்தமாக, வெறியோடு குடிக்கட்டும்; யானைத்தந்தத்தால் செய்த அழகுச் சாமான்கள் அலங்கரிக்கும் வரவேற்பு அறையில் செக்கோஸ்லோவாகியாவிலிருந்து இறக்குமதியான வெட்டுக் கண்ணாடிக் கோப்பைகளில் வேண்டிய மட்டும் குடிக்கட்டும்; தேவதாஸ், பிரேம்நகர் படங்களில் அக்கினேனி நாகேசுவரராவ் மாதிரி தலைவிரிகோலமாக குப்பி குப்பியாகக் குடித்துவிட்டு சோகமாகப் பாடட்டும்; எக்கேடேனும் கெட்டுப் போகட்டும். குடிசை மதுக் கடைகளிலும் ஊருக்குப் புறம்போக்குத் திடல்களிலும் நாட்டுச் சாராயம், கள்ளச் சாராயம் என்று குடிக்கட்டும். சமுதாயத்தின் தாய்மை உணர்வு துடித்தாலும், பல்லைக் கடித்துக் கொண்டு தலையிடாமல் இருக்கலாம். இவ்வுலகில் தவறு செய்யாதவர்கள் எவருமில்லை. (ருகஸ்சித் நாபராத்யதி), என்று சீதை கூறியதை நினைவில் கொண்டு, மற்றவர்களுக்குப் புத்திமதி கூறி, பெரியதனம் செய்து அறமறவாளர்களாகத் திரியாமல் இருக்கலாம்.



ஆனால், மது நஞ்சாகும் எனும் சமுதாய உண்மையைப் போல, மது அருந்தும் ஆண்களால் பெண்கள் படும் தொல்லைகளை முழுவதும் எடுத்துக் கூற வேண்டிய திறன் சூபர் கணிப்பொறிக்கும் கிடையாது என்பதும் ஒரு சமுதாய உண்மை. பெரிய ஆபீசர்கள், செல்வந்தர்கள் வீட்டில் நடக்கும் வேதனைச் சம்பவங்களைக் கட்டுரையாக எழுதினால் நம்பமாட்டார்கள்; கதை என்பார்கள்; கதையாக எழுதினால் படிக்கமாட்டார்கள்; அதீத கற்பனை என்பார்கள்; அப்படி ஒரு நாகரிக பயங்கரம் இந்த இல்லங்களைப் பாழடித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பெண்மணிகள் வெளியில் சொல்லமுடியாது தவிக்கும் அவலத்தை எழுதப் புகுந்தால் பேனாவும் வெந்துபோகும். சமீபத்தில் பொருளாதாரப் பேராசிரியர் ஒருவர், தான் தமிழகக் கிராமமொன்றுக்குச் சென்றதையும், அங்கு கண்ட துயரத்தையும் குறித்து, பம்பாயிலிருந்து வெளிவரும் 'எகனாமிக் டைம்ஸ்' பத்திரிகையில் எழுதி இருந்ததைப் (27.12.90) படித்தேன்.

''குடிபோதையில் பெண்களை ஓயாது அடித்து வருவதாலும், அவளது சிறு சேமிப்புகளைப் பிடுங்கிக் கொள்ள அவளை அடித்து நொறுக்குவதாலும் ஏற்படும் துயரத்திற்கு அளவே இல்லை. இருள் கவியும் மாலை நேரத்தில் அந்தக் கிராமத்தின் தெருக்களில் நடப்பதே ஒரு பயங்கர அனுபவமாக இருந்தது; இதயத்தைப் பிழிந்தது. அங்கு நீங்கள் காண்பது அழுதுகொண்டு இருக்கும் பெண்கள், பயத்தால் நடுங்கும் குழந்தைகள்- அவ்வளவே.''

பெண்களின் இந்த அழுகையைக் கேட்டுக் கேட்டுச் செவிடர்களாகி விட்டோமா, என்ன? குடித்துவிட்டு மனைவியை அடிப்பது என்பது ஒரு சமுதாயப் பேருண்மையாக இருக்கிறது. இந்தக் கேடு இல்லாத இந்தியக் கிராமமே இல்லையோ என்று கூடத் தோன்றுகிறது. பெர்னி ஹோரோவிட்ஸ், மது கிஷ்வர் என்று இரண்டு பெண்மணிகள் பஞ்சாபில் ஒரு கிராமத்தைப் பற்றித் தயாரித்த ஆய்வேட்டில் பல பரிதாபங்கள் வெளிச்சமாகத் தெரிகின்றன. 'மனைவியை அடித்தலும் குடிப் பழக்கமும்' என்ற தலைப்பில் ஒரு குட்டிப் புராணமே இருக்கிறது. இவ்வளவிற்கும் இவர்கள் சந்தித்த பெண்மணிகளில் ஒரு சிலரே அடிபடுவதை வெளிப்படையாகக் கூறினார்களாம். கணவன் அடித்தான் என்று மனைவி கூறியதாகத் தெரிந்தால் அந்தப் பஞ்சாபிக் குடிமகனது கௌரவம் என்னவாகும்?

**தீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண்டிக்கத்தக்கது ஒன்று உண்டென்றால், அது குடி என்ற சாபக்கேடுதான்.**

**அபின் மற்றும் போதையளிக்கும் பொருள்கள், மனிதனின் உள்ளத்தை முடமாக்கி, விலங்குகளுக்கும் கீழ்த் தரமான நிலைக்கு அவனைக் கொண்டு போய் விடுகின்றன.**

***— அண்ணல் காந்தியடிகள்.***

''ஜாட் இனப் பெண்களில் ஒருத்தியே அடிபடுவதாக ஒப்புக் கொண்டாள். குடித்துவிட்டால் கணவன் அவளை அடிப்பானாம். அவனோ ஒரு நாள் விட்டு ஒரு நாள்தான் குடிப்பவனாம். அவன் அடிப்பதைத் தவிர்க்க வழி இல்லை என்றாள். சில சமயங்களில் இதற்காக அவனுடன் சண்டை போடுவது உண்டு. ஆனால் பலனேதுமில்லை. அடிபட்டுக் கொண்டே இருக்க வேண்டியதுதான். தன் குழந்தைகள் இந்தத் தவறான வழிகளைக் கவனிக்கிறார்களே என்பதுதான் அவள் கவலை.''

ஜாட் பெண்மணிகள் சிலர் கொடுத்த தகவல்:

''பத்து ஜாட் வீடுகளை எடுத்துக் கொண்டால், ஆறு வீடுகளில் உள்ள ஆண்கள் பெருங்குடியர்கள். அந்த ஆறில் மூன்று ஆண்கள்

பெருங்குடி தவிர, கஞ்சாவும் அடிப்பவர்கள். ஒரு ஜாட் பெண்மணி வீட்டில் தன் கணவன் வைத்துள்ள பெரிய சாராயப் பானையைப் பற்றி ஆய்வாளர்களிடம் வர்ணித்தாள். அதிலிருந்து தினமும் மொண்டு மொண்டு குடிப்பான். சில நாள்களில் காலை ஏழு மணிக்கே குடிக்க ஆரம்பித்துவிடுவான். அதன் பிறகு அந்த வீட்டில் இருக்கவோ, உணவு உண்ணவோ அவளால் முடிவதே இல்லை. நாட்டிலிருந்து வரதட்சணையும் குடியும் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டால் தான் விடியும் என்று அவள் கூறினாள். கணவன் வரும்படியில் பெரும் பகுதியைக் குடித்துத் தீர்ப்பதால் அவளுக்கு வேண்டிய வைத்திய வசதி பெற முடியவில்லை. ஏழு மாத கர்ப்பிணியாயினும் நல்ல சாப்பாடு கிடையாது. கணவன் குடிப்பதால் குடும்பமே கடனில் முழுக ஆரம்பித்துவிட்டது.''

குடித்தால் கணவன்மார்கள் அடிக்கிறார்களா என்று ஆய்வாளர்கள் கேட்டபோது ''சரிதான்! எல்லாம் நித்தியப்படி சமாசாரம்'' என்றார்களாம். 'அடித்தால் அடித்துவிட்டுப் போகட்டும், குடிப்பதால் குடல் வெந்து சாகாமல் இருந்தால் அதுவே பேரதிர்ஷ்டம்' என்று கூறும் துர்ப்பாக்கியவதிகள். ''மனைவி இறந்தால் கணவனுக்குக் கஷ்டமில்லை. அவனது நிலம் பறி போகாது. ஆனால் கணவன் இறந்த பின் பெண்ணின் வாழ்வைச் சமுதாயம் கொடுமையாக்கி விட்டது. அவளுக்கு வரும்படி கிடையாது. அவள் நிலம் பறி போகிறது.''

மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த பூரிபாயி எனும் பெண்மணி சொல்கிறார்; ''எங்களுக்குச் சாராயத்தின் மீதுகூட அவ்வளவு வெறுப்பு இல்லை. ஆனால் சாராயம் குடித்த பின் மனைவியைப் போட்டு அடிக்கும் அவலம் தான் பொறுக்கவில்லை. அதனால்தான் மது எதிர்ப்பை ஒரு இயக்கமாக நடத்துகிறோம்.



### கலய உடைப்புப் போராட்டம்

1972-ஆம் ஆண்டு மகாராஷ்டிரத்தில், தூலியா மாவட்டத்தைச் சேர்ந்த 150 கிராமங்களில் கிராமப் பெண்கள் ஒன்று சேர்ந்து, சாராயக் கடைகளுக்குச் சென்று கள்ளுப் பானைகளை உடைத்துப் போட்டதை இன்றும் சொல்வார்கள். அதனால் மது அரக்கனின் கொட்டம் சிறிது அளவு அடங்கியதும் உண்மை. கார்வாட் கிராமத்தில் 1973-இல் இதேபோல் கலய உடைப்பு விழா நடந்ததாம்.

இந்தப் பெண்மணிகளில் ஏறத்தாழ அனைவருமே குடிகாரக் கணவன் கையால் அடிபடுபவர்கள். சினிமாவில் கதாநாயகன் கதாநாயகிக்கு ஒரே ஒரு அறை விடும் போது மிகரொமான்டிக் டிராஜடியாகத் தோன்றும் காட்சியல்ல இது. யதார்த்த நிலையில், குடித்து விட்டுக் கண்கள் சிவப்பேறி, ஆடைகள் குலைந்து, அசிங்கமாக வைதவாறு வீட்டில் உள்ள பெண்களை அடித்து உதைக்கும் போது, அக்காட்சி நரகமாக இருக்கும். அந்த நரக வாழ்விலே அனுபவிக்கும் ஓர் அபாக்கியவதி கூறுகிறாள்: ''கெஞ்சிக் கேட்டால் குடிப்பதை நிறுத்த மாட்டார்கள். பெண்கள் ஒன்றுகூடி செயல்பட்டால்தான் நாம் எண்ணுவது நடக்கும்.''

குடியைப் பற்றிய சமுதாய உண்மை இதுதான். மனிதன் குடிப்பது இன்று நேற்றல்ல. ஆனால் அதற்காக ஒருவரும் குடிப் பழக்கத்தை உயர்ந்த வேள்வியாகக் கருதவில்லை. அதைத் தவறான வழி என்றே குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள். மது அருந்தி மதி கெட்ட மனிதனால் பெண்கள் அடிபட்டுச் சாவதைக் கண்டிப்பதற்காகவே மதுவை இழித்து வந்துள்ளனர்.

### பெண்களைக் காக்க மதுவிலக்கு


நாட்டின் பாதி ஜனத்தொகை பெண்கள். அடிபட்டு, அடிபட்டு பலகீனமாகிவிட்ட இந்தப் பெண் இனத்தை ஓரளவு காப்பதற்காகவே, மதுவிலக்கு அரசாங்கக் கொள்கையாக வேண்டுமென அண்ணல் காந்தியடிகள் கூறி வந்தார். காந்தி வழி நடந்த தலைவர்களும் கூறி வந்தனர்; மதுவிலக்கைச் சட்டமாகவும் இயற்றினார்கள். இன்றும் குஜராத் மாநிலத்தில் சட்டமாக இருக்கிறது. மனித இனம் வாழவும், தொடரவும், மேன்மையுறவும் கருவைச் சுமந்து, உயிரைப் பணயம் வைத்துக் குழந்தை பெற்று, அவனைப் பண்புள்ளவனாக வளர்த்துவரும் பெண் இனத்திற்கு இந்தச் சிறிய உதவி கூடவா அரசாங்கம் செய்யக் கூடாது? அரசாங்கம் செய்யத் தவறினால், ஊர்ப் பெருமக்கள் கூடவா நல்லது செய்யக் கூடாது?

பெண்கள் மதுவிலக்கு வேண்டும் என்பது தாங்கள் படும் அடிகளை மட்டும் தவிர்ப்பதற்கோ? சமுதாயத்தின் தாய்மை உணர்வு மூலம் மனித இனத்தைக் காப்பதற்காகப் பெண்கள் மூலம் கேட்கும் வரமன்றோ?

''மெய்தளர்ந்து மேனிகெட்டுப்
போனதிந்தக் கள்ளினால்;
கைநடுக்கங் கால்நடுக்கங்
கண்டதிந்தக் கள்ளினால்;
தேசமெங்கும் தீமைகள்
மலிந்ததிந்தக் கள்ளினால்;
நாசமுற்று நாட்டினர்
நலிந்ததிந்தக் கள்ளினால்''

- என்று நாமக்கல் கவிஞர் சிந்திய கண்ணீரை மறந்தோமோ? ஐயா! கள்ளுண்ணாமையை விரதமாக ஏற்று மனித இனத்தின் வருங்காலத்தைக் காப்பாற்றுங்கள்!

நன்றி - 'தினமணி'



**மதுப்பழக்கம்**

**மதுப்பழக்கம் - மனிதப் பழக்கம், வாழ்க்கை முறைகளை மட்டுமல்ல - வாழ்க்கை நெறிகளையும் கெடுக்கிறது.**



வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
விஜய்
உரங்கள்
VIJAY
COMPLEX
N P K
19-19-19
VIJAY
COMPLEX
N P K
17-17-17
VIJAY
விஜய
UREA-N46%
MADRAS FERTILIZERS LTD.
மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்
VIJAY
இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
HTA 7343

# ஈடு இணையற்ற மக்கள் தலைவர் ராஜீவ் காந்தி



## மாண்புமிகு முதல்வர்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

முன்னாள் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களின் அகால மறைவிற்கு இரங்கல் தெரிவித்து, இங்கே முன்மொழியப்பட்டுள்ள இரங்கல் தீர்மானத்தின் மீது, எனது சில உணர்வுகளையும் இணைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய ராஜீவ் காந்தி அவர்கள் நம்மிடையே வாழ்ந்த ஈடு இணையற்ற மக்கள் தலைவர்களுள் ஒருவராவார். உலகின் பெரும் பகுதி நாடுகளால் உயர்வு மிக்க தலைவர் என ஏற்றுக் கொள்ளப் பட்டவர் ஆவார்.

இந்திய ஒருமைப்பாட்டின் சின்னமாக அவர் திகழ்ந்தார். பல்வேறு மொழி பேசும் பல்வேறு தேசிய இனங்களைச் சார்ந்த, பல தரப்பு இந்திய மக்களாலும் நேசிக் கப்பட்ட தலைவர் ஆவார்.

தமிழ்நாட்டைத் தன் தாய் வீடு எனக் கருதி - எப்போது அழைத் தாலும் ஓடி வந்து தமிழகத்திற்கு நேசக் கரம் நீட்டியவர் ஆவார்.

இன்னும் சில நாட்களில் நாட்டின் பிரதமராய் வலம் வருவார் எனக் கருதியிருந்த நமக்கு, அவர் பிணம் வலம் வந்த காட்சியைக் கண்டதி லிருந்து இன்னும் அத்துயரத்தில் இருந்து மீள முடியவில்லை.

மே 21-ந் தேதி, அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்த தமிழகத்தில், அந்த நல்ல தலைவர் வெடிகுண்டு கொண்டு சிதைத்தெறியப்பட்டு படுகொலைக்கு ஆளானார்; நம்மால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார்.

மனிதநேய உணர்வு கொண்ட எவரும் இரக்கமற்ற அரக்கர்களின் இச்செயலை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஒரு நல்ல தலைவரை - ஏழை எளிய மக்களின் உற்ற துணைவரை- நலிவுற்ற மக்களின் நல்வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒருவரை நயவஞ்சகர்கள் சூழ்ச்சி யால் வீழ்த்தி விட்டனர்.

இலங்கைத் தமிழர் இன்னல் தீரவும், அங்குள்ள மக்கள் நிம்மதி யுடன் வாழவும், தன் தாயின் வழி யில் எத்தனையோ தீவிர முயற்சி களில் ஈடுபட்டு வந்தவரை ஈவு இரக்கமற்று இப்படிக் கொலை செய்திட சதிகாரர்களுக்கு எப்படித் தான் மனம் வந்ததோ தெரிய வில்லை.

மிகக் கோரமான முறையில், அவரது முழு உருவத்தைப் பார்க்கக் கூட முடியாத அளவுக்கு, வெடி குண்டு வெடித்துக் கொல்லப்பட்ட செய்தியை இன்னும்கூட நம்மால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதிலும் அவர் இந்த தமிழ் மண்ணில் ரத்தம் சிந்தி மறைந்தார் என்கிற போது, நம்முடைய துயரம் இன்னும் பன்மடங்காகிறது.

அவரது மரணம் போர்க்களத் தில் ஓர் தளபதி அடையும் வீர மரணத்திற்கு ஒப்பாகும்.

மனிதாபிமானமற்ற இக்கோரச் சம்பவம் தமிழகத்தில் நடைபெற்று விட்டதற்கு, நாம் பல்வேறு சூழ் நிலைகளில் எச்சரிக்கை செய்திருந் தும், இங்கு தடுக்காமல் அனுமதித்து வந்த ஆயுதக் கலாச்சாரம்தான் காரணம் என்பதை இன்றைக்கும் ஆணித்தரமாகவே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

''தமிழகத்தில் பரவிய ஆயுதக் கலாச்சாரத்தை - வெடிகுண்டு கலாச்சாரத்தை அனுமதித்திருக்கக் கூடாது; ஆக்கமும் ஊக்கமும் கொடுத் திருக்கக்கூடாது'' என மதிப்பிற்குரிய ராஜீவ் காந்தி அவர்களும், - அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும் தெரிவித்து வந்த கருத்துக் களின் காரணமாக, எங்களை ஈழத் தமிழருக்கு எதிரானவர்கள் எனச் சிலர் சித்திரித்து வந்ததின் விளைவே, இன்றைய அவலத்திற்கெல்லாம் காரணம் என்பதை நல் உணர்வு கொண்டோர் எண்ணிப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.

''இலங்கைத் தமிழர்கள் சிங்கள இனவெறியர்களின் கொலைவெறித்

தாக்குதலில் இருந்து காப்பாற்றப்பட வேண்டும்; இனப் படுகொலை நிறுத்தப்பட வேண்டும். அங்குள்ள தமிழர்களுக்கு நியாயமான உரிமைகள் கிடைக்க வேண்டும். இவ்வளவுக்கும் மேலாக அங்குள்ள தமிழர்களுக்கு நிம்மதியான ஒரு வாழ்வு கிடைக்க வேண்டும்''...

இந்த நோக்கையும் - இலக்கையும் அடையவே அன்னை இந்திரா காந்தியும் அமரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், ராஜீவ் காந்தி அவர்களும் இடையறாது சிந்தித்தனர். அதன் விளைவுதான் இந்திய-இலங்கை ஒப்பந்தம் என அழைக்கப்படும் ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தம் ஆகும்; அந்த ஒப்பந்தம் உருவாகக் காரணமாக இருந்தவர் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆவார்.

இத்தகைய தூய சிந்தனையுடன் ஈழத் தமிழருக்காக உழைத்தவர்களை, திட்டமிட்டுச் சில சதிகாரர்கள் ஈழத் தமிழருக்கு எதிரானவர்கள் எனத் தூபமிட்டு வந்ததின் விளைவை, ராஜீவ் காந்தியின் இழப்பின் மூலம் அனுபவித்திருக்கிறோம்.

எனவே ராஜீவ் அவர்களின் மறைவின் மூலம் நாம் பெற்றுள்ள பாடம், உடனடியாகத் தமிழகம் மீண்டும் அமைதிப்பூங்காவாகத் திகழ, தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும் என்பதாகும்.

அண்டை நாட்டுப் போராளிக் குழுக்கள் அடையாளம் காணப்பட்டு, ஆயுதக் கலாச்சாரம் இந்த மண்ணில் இருந்து சுத்தமாக வெளியேற்றப்படும் நடவடிக்கைகள் மேற்கொண்டாக வேண்டும்.

தமிழ் மண்ணில் நேர்ந்துவிட்ட இக்கொடிய சம்பவத்தின் காரணமாக, இந்தியத் துணைக் கண்டத்தின் ஏனைய மாநிலங்களில் தமிழனுக்கு ஓர் தலைகுனிவு நிலை உண்டாகிவிட்டது. கம்பீரமாக வேட்டி சட்டையோடு பிற மாநிலங்களில நடமாடிய தமிழன், இன்று வேறு விதமாகப் பார்க்கப்படும் இழிநிலை உள்ளது.

அந்த இழிநிலை மாறி மறைந்திடும் வகையில் ராஜீவ் காந்தியின் நினைவை நாம் போற்றுவோம்.

தமிழ்நாட்டு மக்கள் தன்னை நேசிக்கிறார்கள்; தனக்குத் தமிழ்நாடு தான் மிகப் பாதுகாப்பான மாநிலம், என மனமாற எண்ணிய ராஜீவ் காந்தியின் நினைவும், புகழும், என்றென்றும் நிலைத்திடத் தக்க வகையில், அவர் படுகொலைக்கு ஆளாக்கப்பட்ட ஸ்ரீபெரும்புதூரில், தமிழக அரசின் சார்பில் பெருமைக்குரிய வகையில் ஓர் நினைவாலயம் அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அவரது மறைவு குறித்து தமிழக அரசின் சார்பிலும், இந்த அவையின் சார்பிலும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளும் வேளையில், தாங்க முடியா இத்துயரத்தைத் தங்கள் வாழ்க்கையில் எதிர்கொண்டுவிட்ட ராஜீவ் அவர்களின் துணைவியார் திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும், அவரது குழந்தைகளுக்கும் எனது ஆறுதலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடன் கொல்லப்பட்ட காவல் துறையினர், பொதுமக்கள் ஆகியோரின் குடும்பத்தினர்க்கும் எனது அனுதாபத்தைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களது ஒப்பற்ற தலைவரை இழந்து வாடும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினருக்கும் எனது அனுதாபத்தைத்தெரிவித்துக்கொண்டு-

இரங்கல் தீர்மானத்தோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த உணர்வுகளையும் இணைத்துக் கொள்கிறோம் எனக் கூறி அமைகிறேன்.

**— மறைந்த முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து சட்டப்பேரவையில் ஆற்றிய உரை (5.7.91).**

# நான் கனவு காணும் இந்தியா

பின்கண்ட இந்தியா உருவாவதற்காக நான் உழைக்க விரும்புகிறேன்; இது தங்கள் நாடு என்றும், இதை உருவாக்குவதில் தங்களுக்குச் சரியான பங்குரிமை இருக்கிறது என்றும் பரம ஏழைகள் கூட உணரும் விதத்தில் அந்த இந்தியா இருக்க வேண்டும். அந்த இந்தியாவில் உயர்ந்த பிரிவினர், தாழ்ந்த பிரிவினர் என்ற வேற்றுமை இருக்கக் கூடாது. அந்த இந்தியாவில் எல்லா வகுப்புகளும் முழு இணக்கத்துடன் வாழ வேண்டும். தீண்டாமை என்னும் சாபத்தீட்டுக்கோ, மதுபானங்கள், லாகிரி வஸ்துக்கள் என்ற சாபத்தீட்டுக்கோ இடமேயிருக்கக் கூடாது. ஆண்களுக்குச் சமமான உரிமைகளைப் பெண்களும் அனுபவிக்க வேண்டும். உலகின் மற்ற எல்லாப் பகுதிகளுடனும் நாம் சமாதான உறவு கொண்டிருப்போம் என்பதாலும், நாம் பிறரைச் சுரண்டவோ, பிறரால் சுரண்டப்படவோ போவதில்லை என்பதாலும், கூடுமானவரை மிகச் சிறிய ராணுவத்தையே நாம் கொண்டிருக்க வேண்டும். வாயில்லாப் பூச்சிகளாக உள்ள கோடிக்கணக்கான மக்களின் நலசிரத்தைகளுக்கு முரணில்லாதிருக்கும் உள்நாட்டு நலசிரத்தைகளுக்கும் அந்நிய நலசிரத்தைகளுக்கும் தகுந்த மரியாதை அளிக்க வேண்டும். உள்நாடு, வெளிநாடு என்ற வேற்றுமையை, சொந்த முறையில் நான் வெறுக்கிறேன்—நான் கனவில் காணும் இந்தியா இதுதான். இதற்குக் குறைவான எதுவும் எனக்குத் திருப்தி அளிக்காது.

**— காந்தியடிகள்**

# நூல் நயம்

## படைப்பிலக்கியப் பாதையில் எண்பதுகளும் தொண்ணூறுகளும்

**பதிப்பாசிரியர்: தி.தயானந்தன்பிரான்சிஸ்**

**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
பூங்கா நகர், சென்னை-600 003.

விலை:ரூ.30 பக்கம்:199

கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் சார்பில் (சி.எல்.எஸ்) கடந்த ஆண்டு இலக்கிய நண்பர் வட்டக் கருத்தரங் கின்போது படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். கருத்தரங்கத் தலைப்புதான் நூலின் தலைப்பாக அமைந்துள்ளது.

சிறுகதை, மரபுக் கவிதை, புதுக் கவிதை, நாவல், திறனாய்வு ஆகியவை குறித்த ஆய்வுக் கட்டுரைகளை அவ்வத் துறை அறிஞர் பெருமக்கள் வழங்கி யுள்ளார்கள்.

1980-90-ஆம் ஆண்டு காலகட்டங் களில், மேற்காணும் படைப்பிலக்கிய வளர்ச்சி, அவற்றின் நோக்கம் கட்டுரை களில் அலசி ஆராயப்பட்டுள்ளது.

தமிழ் ஆர்வலர்க்கும், ஆராய்ச்சி மாணவர்க்கும் இந்நூல் சிறந்த கை யே டாக அமையும்.

—பி.வி.கிரி.

## பல்கோண பாரதி

**எழுதியவர்: புலவர் நக்கீரன்**

**வெளியிட்டோர்:**

வள்ளி பதிப்பகம், தென்றல்,
7, தெற்கு நாலாந் தெரு,
மன்னார்குடி-614 001.

விலை:ரூ.11 பக்கம்:128

மகாகவி பாரதியாரின் வாழ்க்கை வரலாறு உள்ளது உள்ளபடி உரைக்கும் நூலாகத் திகழுகிறது இது. இவ்வகை நூற்கள், பல வெளிவந்திருந்த போதும் இதற்கொரு தனித்தன்மை இருப்பதை உணரமுடிகிறது.

ஆனால் - வேர்க்கடலையினூடே வேப்பங்கொட்டை கடிபட்டது போல ஆங்காங்கே தட்டுப்படும் எழுத்துப் பிழைகள்... தெளிவற்ற அச்சமைப்பு போன்றவைகளை நாம் குறிப்பிடத்தான் வேண்டும். புத்தகங்களை உருவாக்கு கிறவர்கள், அதன் முக்கியப் பகுதிகளை உணர்த்த தடித்த எழுத்துகளிலே அச்சிடு வதுதான் வழக்கம். இந்நூலிலோ ஆங் காங்கே கீழக்கோடு இடப்பட்டுள்ளது; அவசியம்தானா? இதுபோன்ற சில நெருடல்களோடு கூடிய ஒரு நல்ல நூல்!

—'முடிகொண்டான்'

## திருவள்ளுவர் ஆத்திசூடி

**ஆசிரியர்: சேயோன்**

**வெளியீடு:** முரளி பதிப்பகம்,
80-82, நாட்டு சுப்பராய
முதலிதெரு, சென்னை-600 004.

விலை:ரூ.12 பக்கம்:87

அகர முதல எழுத்தெல்லாம்.

அகம் தூய்மை வாய்மையால் காணப் படும்.

ச

—இப்படி, இந்தப் புதிய திருக்குறள் ஆத்திசூடி நம்மையெல்லாம் மகிழ்விக் கிறது. திருக்குறளின் முதல் அடிகளை மட்டுமே தொகுத்து சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார். ஆசிரியர். 133 தொடர்கள் இந்நூலில் கையாளப்பட்டுள் ளன. அவற்றுக்குச் சொற்பொருளும், கருத்துரையும் கொடுக்கப்பட்டுள்ளன. திருவள்ளுவர் ஆத்திசூடி தவிர, ஔவையார், பாரதியார், பாரதிதாசனார் ஆத்திசூடி யும் நூலில் கொடுக்கப்பட்டுள்ளன. படித்துப் பயன் பெறலாம்.

—பொ. மறைமலை

## தமிழர் நெஞ்சில் பாவேந்தர்

**ஆசிரியர்: கவிஞர் ஆனைவாரி ஆனந்தன்**

**வெளியீடு:** அலைகள் வெளியீட்டகம்,
36, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.

விலை:ரூ.17 பக்கம்:157

பாவேந்தர் பாரதிதாசன் தமிழ் நெஞ்சங்களிலெல்லாம் நீக்கமற நிறைந் துள்ளார். அவரது படைப்புகள் தமிழன் னைக்குச் சூட்டிய அணியாரங்கள். அவற்றைப் பட்டியல் (பாட்டியல்) போட்டுக் காட்டுகிறார் ஆசிரியர்.

நூலின் தொடக்கத்தில் இடம் பெற் றுள்ள 'தமிழ்க் கவிதையின் வளர்ச்சி' முதல், 'பாவேந்தர் தமிழ்த் தாய்க்குச் சேர்த்து வைத்த செல்வங்கள், ஈறாக உள்ள கட்டுரைகளில், ஆசிரியரின் ஆய்வுப் புலமை நன்கு தெரிகிறது.

பாவேந்தரின் வாழ்க்கைக் குறிப்புகள், அவர் எழுதிய நூல்கள், அவர் பெற்ற சிறப்புகள் ஆகியவையும் நூலில் சேர்க்கப் பட்டுள்ளன. அருமையான நூல். அனை வரும் படிக்கலாம்.

## சுதந்திரச் சூரியர்கள்

**ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசன்**

**வெளியீடு:** பாண்டியன் பதிப்பகம்
20, சீனிவாசப் பெருமாள் சன்னதி
முதல் தெரு, சென்னை-600 014.

விலை:ரூ.25 பக்கம்:248

வெள்ளையருக்கு எதிராக வீர முழக்கமிட்ட விடுதலைப் போராட்ட வீரர்கள் 31 பேர்களைக் குறித்த வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய நூல்.

வேலுநாச்சியார், கட்டபொம்மன், மோகனமுத்துவடிவு, வேலுத்தம்பி திலகர், வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய சிவா, நேரு, படேல், நேதாஜி இப்படிச் சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாழ்க் கைக் குறிப்புகள் நன்கு தொகுத்து எழுதப்பெற்றுள்ளன. மாணவர் மட்டு மல்ல, பெரியவர்களும் படிக்கலாம்.

## பேரும் புகழும்

**ஆசிரியர்: எஸ்.ஆர்.கோவிந்தராசன்**

**வெளியீடு:** பல்கலைப் பதிப்பகம்
36, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.

விலை:ரூ.11 பக்கம்:100

பேரும் புகழும் பெற்ற பல்துறை அறிஞர் பெருமக்களைக் குறித்த சுவை யான நிகழ்ச்சிகள் இந்நூலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், அறிஞர்கள், தலைவர்கள் இப்படிப் பலரைக் குறித்த செய்திகளைத் தெரிந்து கொள்ள இது உதவும்.

—பி.வி.ஜி.

## ஏவாத கணைகள்

**ஆசிரியர்: க. சமுத்திரம்**

**வெளியீடு:**

நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41, பி.சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
சென்னை-600 098.

விலை:ரூ.20 பக்கம்:198

சிறுகதைகள், நெடுங்கதைகள் ஆகிய வற்றுக்கு உயிரோட்டம் தருவது எது? கதைகள் நடந்ததாகச் சொல்லப்படும் இடங்களின் மண் வாசனையே அல்லவா?

ஆசிரியர் தனது படைப்புகளில் எல்லாம் அதற்கு முக்கியத்துவம் தருபவர். இக்கதைகளிலும் மண்வாசனை மகுடம் சூட்டிக் கொள்கிறது.

இந்நூலில் உள்ள சிறுகதைகள் ஒவ் வொன்றும் சமூக அநீதிகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

—சுவாமி

# ROHINI POULTRY FEEDS (P) LTD.

*Manufacturers of*

- CATTLE
- POULTRY
- SHRIMP FEEDS

*and*

- DETERGENT CAKE
- POWDER
- ACID SLURRY



## FACTORY

No.133, TRICHY ROAD
DINDIGUL-624 009.
PHONE: 7166 & 5133

## PRINCIPAL OFFICE:

No.377, SURYA NARAYANA CHETTY STREET
TONDIARPET
MADRAS-600 081
PHONE: 55 67 65





# ஆடிப்பட்டம் தேடி விதை!





பண்குளிரும் மார்கழியில்! வீடுதொறும் தீபம்
படைவரிசை போலமையும் கார்த்திகையில்! இந்த
மண்குளிரும் பெருமழையால்; அணைகளில்நீர் தேங்கும்!
மடைநனையும் ஆனி,ஆடி, ஆற்றுநீரில்! பொன்போல்
கண்குளிரும் படியின்னும் குறுவைநெல்லைச் சேற்றுக்
கழனியிலே விதைத்ததனை முப்பதாம்நா ளின்பின்
பண்பட்ட வயல்வெளியில் பறித்துநட்டே நல்ல
பலன்காண்பார் ஐப்பசியில்! இதுமட்டு மல்ல!

புரட்டாசி, ஐப்பசியில் சம்பாவை நட்டுப்
பனிதுவங்கும் மார்கழியில், தையில்அறுப் பார்கள்!
வரப்பினிலே தெளிக்கின்ற பயறுஉளுந்து யாவும்
மாசியிலே! ஆவணியில் தாளடியாம்! நீண்டு
திரண்ட புடலை, அவரை, கொத்தவரை எல்லாம்
தோதுபடக் கார்த்திகையில் பலன்கொடுக்கும்! பொங்கல்
கரும்புயரும் தையினிலே! தித்திக்கும் சீனிக்
கரும்புமாசி பங்குனியில் முழுவளர்ச்சி காணும்!

நெல்முற்றித் தலைசாய்க்க மூன்றுமாதம் ஆகும்!
நடுவதற்கும் அறுப்பதற்கும் குறித்தமாதம் உண்டு!
நல்வாழைக் கன்றுக்கோ எல்லாமே மாதம்!
நீள்காம்பு மாங்கனியோ ஆனியிலே! மேனி
எல்லாம்முள் முள்ளான பலாப்பழமோ வாய்க்கும்
இனிப்போடு காய்க்கும்வை காசியிலே! வெய்யில்
கொல்லுகின்ற கோடைகாலம் சித்திரைவை காசி
குடைமிளகாய், சிறுமிளகாய் வருகைதரும் மாதம்!

பன்னிரண்டு திங்களும்இவ் வாறுவிவ சாயி
படும்பாட்டி னாலேதான் கண்டுமுத லெல்லாம்
நன்றாகும்! அவராலே நகருயரும்! இந்த
நாடுயரும்! தன்னிறைவு வாய்க்கும்துறை தோறும்!
என்பதனை உணர்த்திடவே வள்ளுவரும் கூட
இன்குறளில் 'சுழன்றும்ஏர்ப் பின்னதுலகு' என்றார்!
அன்பர்களே! காவிரிப்பெண் நம்மைவாழ் விப்பாள்;
ஆடிப்பட்டம் தேடி விதைத்திடலாம் வாரீர்!

—பட்டுக்கோட்டை இராசேந்திரன்

தந்தி: 'நிஜாம்' தொலைபேசி: 2263, 2186

22-வது ஆண்டில்

பீடுநடைபோடும்

'தமிழரசு' இதழுக்கு

எங்கள் நல்வாழ்த்துக்கள்



# நிஜாம் லேடி

ஸ்பெஷல் - பன்னீர்

புகையிலை

தயாரிப்பாளர்கள்

ஹாஜி A.M. அப்துல் ரஹிமான் ராவுத்தர் & கோ.

நிஜாம் புகையிலைத் தொழிற்சாலை,

தபால் பெட்டி எண்.4

புதுக்கோட்டை - 622 001



# கர்ம வீரர் காமராசர்

இரா. சதாசிவன்

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று''

என்னும் பொய்யா மொழிக்கிணங்க இருபதாம் நூற்றாண்டில் தோன்றி, 'கறுப்புக் காந்தி' என்று சிறப்புடன் அழைக்கப்படும் கர்ம வீரர் காமராசர் அவர்களைக் குறள் நெறி காத்த குறையில்லாத் தலைவர் என்றால் அது மிகையாகாது.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் இளைஞர்கள் நாட்டை ஆள வேண்டும் என்பதற்காகக் 'காமராசர் திட்டம்' என்னும் திட்டத்தைத் தாமே கொண்டு வந்து அத்திட்டத்தின்படி, தமிழ்நாட்டின் முதலமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார். இந்தியத் தலைமகன் மனிதருள் மாணிக்கம் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கையில், நாட்டின் தலைமைப் பொறுப்பாகிய தலைமையமைச்சர் பொறுப்பை ஏற்கச் சொல்லியும் ஏற்காமல், அகில இந்திய காங்கிரசுத் தலைவர் பொறுப்பை ஏற்றார். பண்டித ஜவகர்லால் நேருவின் மறைவுக்குப் பின்னர் தாயகத்தின் தலைமையமைச்சர் யார் என்னும் சர்ச்சை எழுந்தபோது, நாட்டு மக்களிடையே எந்தவித ஜனநாயக மற்றும் ஆட்சிமுறையில் கலக்கம் ஏற்படாமலிருக்க, போட்டியைத் தவிர்த்து திறமை மிக்க லால்பகதூர் சாஸ்திரி அவர்களைத் தலைமையமைச்சராகத் தேர்ந்தெடுக்கச் செய்தார். குறுகிய காலமே ஆட்சி புரிந்த லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் மரணமடைந்ததும், மறுபடியும் போட்டியைத் தவிர்த்து, பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் அருமைப் புதல்வி இந்திராகாந்தி அம்மையார் அவர்களைத் தாயகத்தின் தலைமையமைச்சராக்கினார்.

இப்படிப்பட்ட செயற்கரிய செயல்களைச் செய்ததனாலேயே காமராசர் அவர்கள் நாட்டு மக்களால் 'கர்ம வீரர்' என அன்புடன் அழைக்கப்படலானார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் இன்று நம்மிடையே இல்லையாயினும், நாட்டு மக்கள் அனைவரின் இதயத்திலும் அன்னாரின் நினைவு வேரூன்றி நிலைத்து நிற்கிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியன்றோ? பெருந்தலைவர் அவர்களின் சிறந்த சேவையைப் பாராட்டி, போற்றி புகழ்ந்து அவர் மறைந்த பிறகு பாரத அரசு அவருக்குப் பாரதத்தின் மிக உயர்ந்த விருதாகிய 'பாரத ரத்னா' விருதை வழங்கிக் கௌரவித்து உலகம் உள்ளளவும் அவரின் பெயரை நிலைபெறச் செய்துள்ளது.

தமிழக அரசு பெருந்தலைவரின் குடிசை வீட்டை விலைக்கு வாங்கி கர்ம வீரரின் நினைவுச் சின்னமாக்கியது. மேலும் அன்னாரின் சமாதியை நினைவாலயமாகக் கட்டியுள்ளது. பெரிய பதவிகள் வகித்த போதும், தன்னலம் கருதாது பிறர் நலம் கருதும் பண்புடையாளராகத் திகழ்ந்தார் காமராசர். அவர், தனக்கென எதுவும் சம்பாதித்து வைக்கவும் இல்லை; கடைசி வரை திருமணம் செய்து கொள்ளவும் இல்லை. நாட்டு மக்களுக்காகத் தன் உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப்பணஞ் செய்து அல்லும், பகலும் அயராது பாடுபட்டார். இதனாலே தான் நாட்டு மக்கள் அவரைக் 'கறுப்புக் காந்தி' என்று அன்புடன் அழைத்தார்கள்.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் அடிப்படைக் கல்வியாக ஐந்தாவது படிவம்வரை படித்து, நாட்டு மக்களிடமிருந்து நேரடியாகவும், அரசியல், நிர்வாகம், ஆட்சி முறை, இலக்கியங்கள், கவிதைகள், காப்பியங்கள், சட்டங்கள், நீதி நெறிகள் ஆகியவற்றை அனுபவ ரீதியாகக் கற்று, அப்படிக் கற்ற கல்வியின் வழி ஒழுகினார் என்பதற்குச் சான்றாகச் சென்னையில் திருமலைப் பிள்ளை சாலையில் அமைந்திருக்கும் காமராசர் இல்லப் படிப்பக அறையில் பெருந்தலைவரால் படிக்கப்பட்டு, தற்போது தமிழக அரசால் பத்திரப்படுத்தப்பட்டு வைத்திருக்கும் புத்தக சாலையை வைத்து, அவரது அறிவாற்றலைத் தெள்ளத் தெளிவாக நாம் அறிந்து கொள்ளலாம். பெருந்தலைவர் காமராசர் அவர்கள் ஒரு படிக்காத - அதாவது பள்ளியில், கல்லூரியில், பல்கலைக்கழகத்தில் படிக்காத மேதை! அதே நேரத்தில் அவர் பெற்றிருந்த பட்டறிவு-உலகனுபவம் அளவிடற்கரியது.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தமிழ்நாட்டில் முதலமைச்சராக ஆட்சி புரிந்தபோது, தமிழ்நாட்டில் அன்னாரின் கால்படாத கிராமம் இல்லை என்பது குன்றின் மேலிட்ட விளக்கு.

''மக்கள் தொண்டே மகேசன் தொண்டு!'' என்னும் சுவாமி விவேகானந்தர் அவர்களின் போதனையைக் கைக்கொண்டு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் நாட்டு மக்களுக்குத் தம் அரசாலான – தம்மாலான தொண்டுகளை எத்தகைய எதிர்பார்ப்புமின்றிக் கடமையைச் செய்து வந்தார்.

மானிட மாணிக்கம் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் இந்தியாவின் தலைமையமைச்சராகவும்,

## அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை:** பெருந்தலைவர் காமராசர் (பிறந்தநாள் ஜூலை-15)

**இரண்டாம் அட்டை:** பேரவைத் தலைவர் பதவியேற்பு (மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு.எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம்).

**நான்காம் அட்டை:** மேதகு ஆளுநர் அவர்கள் சட்டப்பேரவையில் உரையாற்றுதல்.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகவும் ஆட்சி புரிந்தபோது தமிழ்நாட்டில் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பல அணைக்கட்டுகள், தொழிற்சாலைகள், சாலைகள், போக்குவரத்து வசதிகள், பலநோக்குத் திட்டங்கள், கல்விச் சாலைகள், அறநிலையங்கள், அரசு மருத்துவமனைகள், முதியோர் ஓய்வு இல்லங்கள், பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள், தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகள் எல்லாம் பலபட அமைக்கப்பட்டன.

சுருங்கக் கூறின் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் அரசு சேம நல அரச ாகவும், ஆட்சிமுறை சமத்துவ சமதர்மமாகவும், ஜனநாயக ரீதியாகவும் அமைந்தது.

## உலக மக்கள் தொகை நாள்:

### மாண்புமிகு முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் செய்தி

ஜூலை 11-ஆம் நாள் உலக மக்கள் தொகை தினமாகும். இந்தியாவில் இன்றைய மக்கள் தொகை 84 கோடி; தமிழ்நாட்டின் மக்கள் தொகை 5.6 கோடி என்பதை இந்த நாளில் நாம் நினைவு கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலை நீடித்தால், கி.பி.2000 ஆண்டில் இந்தியா, சீனாவை மிஞ்சி, உலகிலேயே மக்கள் தொகை மிகுந்த நாடாக விளங்கும்.

நமது நாடு விடுதலைக்குப் பிறகு தொழில், விவசாயம், மின் சக்தி உற்பத்தி, பொருளாதார வளர்ச்சி ஆகிய துறைகளில் மாபெரும் சாதனை படைத்திருக்கிறது. ஆனால், இந்தச் சாதனைகள் எல்லாம், மிகுந்த மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. மொத்த அடிப்படை வளங்களையும், பெருகிவரும் அளவுக்கதிகமாக மக்கள் தொகை பங்கிட்டுக் கொள்வதால், தனி நபருக்குக் கிடைக்கக் கூடிய நிலத்தின் அளவு, மொத்த தேசிய உற்பத்தி, உணவு, பள்ளி, கல்லூரிகளில் இடங்கள், மருத்துவமனை படுக்கை வசதிகள், வேலை வாய்ப்புகள் ஆகிய அனைத்துக்கும் பற்றாக்குறை ஏற்பட்டு வருகின்றன. அத்துடன் நாட்டின் ஒட்டுமொத்தமான வாழ்க்கைத் தரத்திற்கும் பின்னடைவு ஏற்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டினை, 'பாதுகாப்பான தாய்மை' ஆண்டாக அறிவித்திருப்பதையொட்டி, தமிழ்நாட்டில் (அனைவரையும் உள்ளடக்கிய) 'குழந்தைப் பிறப்புகளுக்கிடையே இடைவெளி தரும் திட்டத்தைத் தொடங்கி வைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் உடல் நலப் பாதுகாப்புக்கான வசதிகள் செய்து தரப்படும். கருத்தடைச் சாதனங்கள் இலவசமாக வழங்கப்படும். மாநிலம் முழுவதும் உள்ள துணைச் சுகாதார நிலையங்கள், நகர்ப்புறச் சுகாதாரத் திட்டங்கள், பேறுகாலப் பின் தொடர் மருத்துவத் திட்ட நிலையங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் கிராமப்புறச் செவிலியர் (சுகாதாரப் பெண் பணியாளர்) மூலம் இந்த வசதி கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இவ்வளவு காலமாக மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வரும் எல்லாக் கிராமப்புறச் சுகாதாரச் செவிலியர்கள், மேற்பார்வையாளர்கள், சமுதாய நல்வாழ்வுச் செவிலியர்கள், மருத்துவர்கள், சுகாதாரக் கல்வியாளர்கள் மற்றும் இதர வளர்ச்சித் துறைகளின் களப் பணியாளர்கள் ஆகிய அனைவரையும் நான் இத்தருணத்தில் பாராட்டுகிறேன். அவர்கள் தங்கள் கடமையில் தொய்வின்றி முனைப்போடு பணியாற்றி, மாநிலத்தில் உள்ள மகளிர் அனைவருக்கும் சுகாதார மற்றும் கருத்தடைச் சாதன வசதிகள் கிடைக்குமாறு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927


எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.



தமிழரசு
பதிவு எண் M 8676
Licence No. TN/MS(C) PP-23